**இலங்கை மின்சார சபை மற்றும் அதன் துணைக் கம்பனிகள் - 2023**

-----------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையினதும் (சபை) அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன. எல்ரீஎல் ஹோல்டிங் (பிரைவட்) லிமிடட் மற்றும் திருகோணமலை பவர் கம்பனி லிமிடட் இன் நிதிக்கூற்றுக்கள் குறித்த துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குழுமத்தினது 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றித்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையினதும் குழுமத்தினதும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது

குழுமத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையும் குழுமமும் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையினதும் குழுமத்தினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையினதும் குழுமத்தினதும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையினதும் குழுமத்தினதும் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையும் குழுமமும் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையினதும் குழுமத்தினதும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமையுடன் தொடர்புடைய உரிய நியமங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) LKAS 01 – நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** | | |
| (i) இலங்கை மின்சார சபையின் கீழ் தனியான ஒரு நிறுவனமாக தொழிற்பட்டு வருகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 54.44 மில்லியன் செலவுகள், நியமத்தின் 15 ஆம் பந்தியின் நியதிகளுக்கமைய நிதியியல் அறிக்கையிடலுக்கான கருத்தியல் சட்டகத்தின் வரைவிலக்கணம் மற்றும் அங்கீகரித்தல் அளவுகோல்களுக்கு முரணாக சபையின் ஆண்டிற்கான வருமானக் கூற்றில் சபையின் செலவுகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட விடயம் சரி செய்யப்பட்டு எதிர்வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும். இ.மி.ச இன் மறுசீரமைப்பு செயற்பாட்டின் போது இது சரி செய்யப்படும். | சபையின் செலவுகளை அங்கீகரிப்பது தொடர்பில் எல்கேஏஎஸ் 01 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ii) நியமத்தின் 69 ஆம் பந்திக்கு முரணாக, ரூபா 448.66 மில்லியன் பெறுமதியான கையிருப்பு சீராக்கக் கணக்கின் வரவு மீதி ஏனைய கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டுள்ளதோடு, ரூபா 424.19 மில்லியன் பெறுமதியான கையிருப்பு சீராக்கக் கணக்கின் செலவு மீதியானது சரக்கு மீதியின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும், மேற்குறிப்பிட்ட இருப்புச் சீராக்க மீதிகளிலுள்ள இருப்புப் பற்றாக்குறை தொடர்பான வரவு மீதியான ரூபா 138.52 மில்லியன் மற்றும் ரூபா 128.1 மில்லியன் தொகையான இருப்பு மேலதிகத்துடன் தொடர்புடைய செலவு மீதியொன்று ஒரு வருடத்திற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருப்புச் சீராக்கக் கணக்கில் மீதமுள்ளது. | வெளிப்படுத்தல்கள் தேவைப்பட்டால் 31 டிசம்பர் 2024 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான எதிர்வரும் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படும். | நிதி அறிக்கைகளை வழங்குவது தொடர்பாக LKAS 01 இல் உள்ள விதிகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |
| **(ஆ) LKAS 2 - இருப்புக்கள்** | | |
| சபையானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி | உண்மையான விலைகளுக்கும் நிலையான விலைகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்காக, இரண்டு | இருப்புகளின் கிரயத்தை அங்கீகரிப்பது தொடர்பாக LKAS |

| | | |
|---|---|---|
| நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட சாதக மேந்தலை விலை மற்றும் பொருள் விலை முரண்கள் முறையே ரூபா 3,166.1 மில்லியன் மற்றும் ரூபா 15,897.9 மில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்டது. அத்துடன் ரூபா 5,592.4 பில்லியன் கூட்டுத்தொகையான பாதக களஞ்சிய விலை முரணும் காணப்பட்டது. அதன்படி, அந்த வேலைகள் தொடர்பான தேவையான தகவல்கள் கணக்காய்வக்கு கிடைக்காததால், நிதி அறிக்கைகளில் உள்ள செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள் மற்றும் உரிமைத் துவத்தின் மீதான தாக்கங்களை சரியாக உறுதிப்படுத்த முடியவில்லை. | ஆண்டுகளுக்கு ஒரு முறை நிலையான விலைகளை மதிப்பாய்வு செய்ய விலை நிர்ணயக் குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டது. மேற்கூறிய வற்றுக்கு மேலதிகமாக, இ.மி.ச. இன் மறுசீரமைப்பு செயல் முறையை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மறுசீரமைப்பிற்குப் பின்னர், ஒரு தனிக் கம்பனியாக நிறையளித்த சராசரி இருப்பு மதிப்பீட்டு முறையுடன் ERP முறைமை செயல்படுத்தியவுடன், இந்த சிக்கல்கள் நீக்கப்படும். | 02 இல் உள்ள விதிகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |

**(இ) LKAS 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்**

| | | |
|---|---|---|
| (i) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (LKAS 16) 51 ஆம் பந்தியின் படி, சொத்தின் பயனளிக்கும் ஆயுட்காலம் குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன் எதிர்பார்ப்புகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின், மாற்றங்கள் LKAS 08 இற்கு இணங்க கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வு செய்யப்படும் வருட இறுதியில் காணப்பட்ட ரூபா 214,809 மில்லியன் கிரயப் பெறுமதியான முழுமையாக தேய்வடைந்த சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மின்சார சபையின் சொத்து பயன்பாட்டு வாழ்க்கை பற்றிய வருடாந்த மீளாய்வு நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியாகும். மேலும், இலங்கை மின்சார சபை ரூபா 955 பில்லியன் சொத்துத் தளத்தைக் கொண்டுள்ள ஒரு நிறுவனமாக இருப்பதாலும், மின்னுற்பத்தித் தொகுதிகள் மற்றும் பரிமாற்ற வழிகள் போன்ற பிரதான சொத்து கூறுகளின் தனித்துவம் மற்றும் சிக்கல் தன்மையைக் கருத்தில் கொண்டும், சொத்துக் களின் பயனுள்ள ஆயுளை வருடாந்தம் மதிப்பாய்வு செய்வது இலகுவானதும் நடைமுறைச் சாத்தியமும் அற்ற ஒரு விடயமாகும். எவ்வாறா யினும் முன்னோக்கிச் செல்லும் போது, அனைத்து சொத்துக்களி னதும் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படுவதை நாம் உறுதி செய்வதுடன், மதிப்பீடு களில் | சபையில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமை யாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக LKAS 16 இல் உள்ள விதிகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் LKAS 8 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்படும். | |
| (ii) இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் முன்னைய ஆண்டுக்கான வருடாந்த ஒழுங்குபடுத்தல் வரியாக ரூபா 209.68 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டிற்கான ரூபா 167.25 தொகையை மட்டுமே சபை கணக்கிட்டிருந்ததுடன், நியமத்தின் பிரிவு 41 மற்றும் 42 இன் நியதிகளின் அடிப்படையில் முன்தேதியிட்டு சரிசெய்யப்படாமல் ரூ.42.43 மில்லியன் வித்தியாசம் மீளாய்வாண்டின் செலவாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான இலாபம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதுடன் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் தொடக்கத்தில் உள்ள நிறுத்திவைத்த உழைப்பு அதே தொகையால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. | 2022 நிதியாண்டில் வருடாந்த ஒழுங்குமுறை விதிப்பனவு ரூ.167.25 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், சபையி னாலும் அங்கீகரிக்கப்பட்டுள் ளது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டில் PUSCL அனுப்பிய விலைப்பட்டியல் படி மீதமுள்ள வருடாந்திர ஒழுங்குமுறை வரியை செலுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. எனவே, இது மதிப்பீடுகளில் மாற்றங்களாகக் கருதப்படுவதால் நியமத்தால் எதிர்கால பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது. மேலும், அது பிழை என்று கருதப்பட்டாலும், பின்னோக்கிய பிரயோகம் அல்லது மறு அறிக்கை தேவைப்படுமாயின், நிர்வாகத்தின் நோக்கம் குறித்த அனுமானங்கள் அந்த காலகட்டத்தில் இருந்திருக்கும். 2022 ஆம் ஆண்டில் ரூபா 167.25 மில்லியன் மதிப்பீட்டின் மூலம் நிர்வாக நோக்கம் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, பிழையைத் திருத்துவதற்கு முன்தேதியிட்டு மறு அறிக்கை செய்வது நடைமுறைச் சாத்தியமற்றது. | பிழைகளை சரிசெய்யும்போது LKAS 08 இல் உள்ள விதிகளுக ளுடன் இணங்குதல் வேண்டும். |
| **(ஈ) LKAS 12 - வருமான வரி** | | |
| 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய சபையின் தவணை தவறுகை வரி அறிக்கையின் பிரகாரம், 2015/2016 வரி மதிப்பீட்டு ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை கூட்டிணைந்த வருமான வரி, உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் பெறுமதி சேர் வரி என்பவற்றிற்கான வரி மற்றும் தண்டப்பணங்களாக செலுத்தப்பட வேண்டிய தொகை முறையே ரூபா 36.62 மில்லியன், ரூ.665.11 மில்லியன் மற்றும் ரூபா 97.5 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், சபையினால் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த போதிலும், வருட இறுதியில் அந்த வரிகளுக்காக இறுதித் தீர்மானம் பெறப்படவில்லை. எவ்வாறாயினும், | இந்த விடயத்தில், பரிசீலனையில் உள்ள வரிகள் மற்றும் அபராதங்கள் சபையால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளுக்கு உட்பட்டவை. இந்த மேல்முறையீடுகளின் இறுதி தீர்மானங்கள் நிலுவையில் உள்ளதுடன் செலுத்த வேண்டிய தொகைகள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்தத் தொகைகளை நிராகரிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக இலங்கை மின்சார சபை நம்புகிறது, மேலும் மேல்முறையீடுகளின் முடிவு | வரிகளில் தீர்க்கப்படாத தகராறுகளை வெளிப்படுத்தும் போது LKAS 12 இல் உள்ள விதிகளுக்கு இணங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமான வரி மீதான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் (LKAS 12) பிரிவு 88 இன் நியதிகளின் பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கான சபையின் நிதிநிலை அறிக்கைகளில் இது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த பொறுப்புகளை மாற்றியமைக்கக்கூடும். தேவைப்பட்டால், வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்த அடுத்தடுத்த நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தல்களை நாங்கள் ஏற்பாடுகளை செய்வோம். | |

**(உ) LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| நீர்ப்பாசன அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஒக்டோபர் 24 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரம் தொடர்பாக எடுக்கப்பட்ட 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 21/1920/317/051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் எதிர்பாராத தாமதங்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு 38.612 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பீடு கோருவதற்கும், இந்த மேலதிக கொடுப்பனவை இந்த கருத்திட்டத்தின் மூலம் பெறப்படும் வருமானத்தை கருத்திற்கொண்டு சபையினால் நிதியளிக்கப்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், ஆரம்பத்தில் 50 சதவீதத்தை செலுத்தவும், குறைபாடானது பொறுப்புக் காலம் காலாவதியான பின்னர் செலுத்த வேண்டிய மீதமுள்ள 50 சதவீதத்தை செலுத்தவும் முடிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், சபையின் கணக்குப் புத்தகங்களின் பிரகாரம், மொத்த தாமதக் கட்டணத்தின் 50 சதவீதத்திற்கு சமமான ரூபா 6,227.3 மில்லியன் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் மாத்திரமே கணக்கிடப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 19.306 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு LKAS 37 இன் பிரிவு 14 இன் பிரகாரம் ஆண்டின் இறுதியிலும் கூட எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. | அக்டோபர் 2024 கணக்குகளின் போது திட்டப் பிரிவின் கணக்கு புத்தகங்களில் பொறுப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், தாமத உரிமைகோரலைக் குறைக்க / நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் ஒப்பந்தக்காரருடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த பரிந்துரைக்கப்படுகிறது. | பொறுப்புக்கான ஏற்பாட்டை அங்கீகரிப்பது தொடர்பில் LKAS 37 இல் உள்ள விதிகளுடன் இணங்க வேண்டும். |

**(ஊ) SLFRS 09 - நிதியியல் கருவிகள்**

(i) வியாபாரக் கடன்பட்டோரின் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை அங்கீகரிப்பதற்காக சபை ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை மற்றும் முறைமையை அறிமுகப்படுத்தியிருந்த போதிலும், நானாவிதக் கடன்பட்டோர், புனித இடங்களிலிருந்து செலுத்த வேண்டிய நிலுவைகள் போன்றவற்றை உள்ளடக்கிய பிற பெறத்தக்க தொகைகளுக்கு அத்தகைய அணுகுமுறை மற்றும் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய ரூபா 213.49 மில்லியன் மற்றும் ரூபா 118.54 மில்லியன் ஏனைய கடன்பட்டோர் மீதிகள் முறையே விநியோகப் பிரிவு 01 மற்றும் 04 இல் 1 முதல் 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளன. எவ்வாறாயினும், முறையே ரூபா 102.01 மில்லியன் மற்றும் ரூபா 59.87 மில்லியனுக்கு சமமான தொகை முறையே மதிப்பிழப்பு ஏற்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், விநியோகப் பிரிவு 02 மற்றும் 03 இல் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள்ள தொகையான முறையே ரூ.142.37 மில்லியன் மற்றும் ரூ.107.99 மில்லியனுக்காக எந்த வொரு ஒதுக்கீடும் செய்யப்பட வில்லை. அதேபோன்று 01 முதல் 05 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள ரூபா 341.32 மில்லியன் ஏனைய பெறுகைகளுக்கு, எதிர்பார்க் கப்பட்ட கொடுகடன் இழப்பை சரியாக இனங்காணாமல் ரூபா 74.35 மில்லியனுக்கு சமமான தொகை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கண்ட கண்டுபிடிப்புகளால், நிதிநிலை அறிக்கையில் உள்ள நிதிச் சொத்துகளின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

**விநியோகப் பிரிவு 01**

பிற பெறத்தக்கவைகளின் மீட்க க்கூடிய தன்மையை பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில் பிற பெறத்தக்கவைகளுக்கு தேவை யான குறிப்பான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாகாணங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படும். புனித இடங்களிலிருந்து வரவேண்டிய நிலுவைகளுக்காகவும், நானாவித கடனாளிகள் நிலுவைத் தொகைக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**விநியோகப் பிரிவு 02**

இது 2024 நிதி அறிக்கைகளில் சரி செய்யப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள ஏனைய பெறவேண்டியவைகளுக்கு 100% குறிப்பிட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (புனித இடங்கள். மஹிந்த சிந்தனை, இலவச சேவை இணைப்பு) எவ்வாறாயினும், புண்ணிய ஸ்தலங்கள் மற்றும் மஹிந்த சிந்தனையின் நிலுவை மீதிகளை பதிவழிப்பதற்காக ஒரு சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**விநியோகப் பிரிவு 03**

மே 2024 கணக்குகளில் புனித இடங்களிலிருந்து நிலுவைத் தொகைக்கு முழு ஏற்பாடு செய்யப்பட்டது. சுற்றுநிருபத்திற்கு இணங்கியொழுகுவதற்கு கொடுகடன் இடர்நேர்வில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் மீதிகளை மீளப் பெறக்கூடிய தன்மை என்பவற்றின் நியாயமான மதிப்பீட்டின் பின்னர் ஏனைய பெறுதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**விநியோகப் பிரிவு 04**

ஏனைய கடனாளிகளின் நட்டத்திற்கான ஏற்பாட்டை நாம் செய்துள்ளோம்.

மதிப்பிழப்புக்கான ஏற்பாடுகள் தொடர்பாக SLFRS 09 இல் உள்ள விதிகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2016/17 வரி மதிப்பீட்டாண்டிலிருந்து 2019/20 வரை செலுத்தப்பட்ட ரூபா 3,914 மில்லியன் பொருளாதார சேவைக் கட்டணங்கள் (ESC) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் கோரப்படக்கூடிய இரண்டு வருட காலப்பகுதியை விஞ்சியிருந்தது. இருப்பினும், விரிவான வருமான அறிக்கைகளில் இது செலவு களாக அங்கீகரிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக ரூபா 3,914 மில்லியன் நிதி ஒதுக்கீடுகள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ESC இன் பெறத்தக்க மீதியானது நியமத்தின் ஏற்பாட்டு நியதிகளில் நிதிச் சொத்துக்களின் வரைவிலக்கணத்தை பூர்த்தி செய்ய வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டிற்கான அடுத்தடுத்த நிதி அறிக்கைகளில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் குறிப்பிடப்பட்ட தொகை விரிவான வருமானத்திற்கு செலவினமாக வசூலிக்கப்படும். | மதிப்பிழப்புக்கான ஏற்பாட்டை மேற்கொள்கையில் SLFRS 09 இலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் உள்ளக விலை மதிப்பீட்டுக் குழுவினால் வழங்கபட்ட மதிப்பீட்டின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில் விநியோகப் பிரிவு 04 இன் கூட்டாண்மைப் பிரிவிலிருந்து அகற்றப்பட்ட மின்மாற்றிகள் மீளாய் வாண்டிற்கான கணக்கு ஏடுகளில் ரூபா 826.6 மில்லியன் ஆல் முறையே இருப்புகளுக்கு வரவு வைக்கப்பட்டு ஏனைய செலுத்த வேண்டியவை களில் செலவு வைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், அந்த மின்மாற்றிகளின் விலை மற்றும் திரட்டிய தேய்மானம் கணக்கேடுகளிலிருந்து நீக்கப்பட்டிருக்காமையாலும் போதிய தகவல் இல்லாததாலும் நிதிநிலை அறிக்கைகளில் ஏற்படும் தாக்கத்தை கணக்காய்வில் கண்டறிய முடிய வில்லை. | 2023 ஆம் ஆண்டில் மீதமுள்ள ரூபா 421.17 மில்லியனில், 2024 இல் ரூபா 205.92 மில்லியன் செலுத்தப்பட்டது. துல்லியமான மின்மாற்றி எண் மற்றும் SIN எண்ணை அடையாளம் காண்பதன் மூலம் மின்மாற்றிகளின் செலவு மற்றும் திரட்டப்பட்ட தேய்மானத்தை நீக்க முடியும். நிலையான சொத்து பதிவேட்டில் இருந்து அவற்றை நீக்குவதற்கு முன்னர் சரியான மின்மாற்றிகளை அடையாளம் காண சம்பந்தப்பட்ட அலகுகளிலிருந்து சரியான தகவல்கள் கோரப்படுகின்றன. | அகற்றப்பட்ட மின்மாற்றிகளின் கிரயத்தையும் திரட்டிய தேய்மானத்தையும் நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 15 செப்டம்பர் 2023 நிலவரப்படியான பழைய நிலக்கரி இருப்புப் பெறுமதியானது சரிபார்ப்புச் சபையால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பிலிருந்து கணக்கிடப் பட்டுள்ளது. 15 செப்டம்பர் 2023 | வருடாந்த நிலக்கரி சரிபார்ப்புக்கு அனல் நிலக்கரி மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகிறது. இந்த குறிப்பிட்ட தேதியில் உள்ளவாறு குதங்களில் மீதமுள்ள நிலக்கரி மற்றும் கப்பல் இல. 369 இலிருந்து | நிலக்கரி இருப்பு சரிபார்ப்பில் பயனற்ற நிலக்கரியைக் கருத்தில் கொள்வதற்கான சரியான வழிமுறை நிறுவப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நிலவரப்படி நிலக்கரி குதத்தில் மீதமுள்ள அனல் நிலக்கரி இருப்பு மேலே கணக்கிடப்பட்ட பழைய நிலக்கரி இருப்பைப் பயன்படுத்தி அளவிடப்பட்டுள்ளதுடன் பச்சை நிலக்கரி கையிருப்பானது கணக்கிடப்பட்ட பழைய நிலக்கரி இருப்பை விட அதிகமாக இருந்தமை காரணமாக 14,964.71 மெட்ரிக் தொன் எதிர்மறை இருப்பு மீதியைக் காண்பித்தது. எனவே, 15 செப்டம்பர் 2023 நிலவரப்படி நிலக்கரி குதத்தில் மீதமுள்ள அனல் நிலக்கரி இருப்பு குறைந்தபட்சம் பூச்சியமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். அதன்படி, குதங்களில் மீதமுள்ள நிலக்கரி கையிருப்பை புதிய நிலக்கரி இறக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு 9,286.37 மெட்ரிக் தொன் அனல் நிலக்கரி கையிருப்பு என்று எடுத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 1,778.6 மில்லியன் பெறுமதியான 24,251 மெட்ரிக் தொன் அனல் நிலக்கரி கையிருப்பு நிலக்கரி கையிருப்பின் மேற்குறிப்பிட்ட எதிர்மறை மீதியைக் கருத்தில் கொண்டு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கான வருமான அறிக்கைகளில் அறவிடப்பட்டுள்ளது. இதற்கமைய கணக்காய்வின் கணக்கீடுகளின்படி மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்கான இலாபம் மற்றும் நிலக்கரி கையிருப்பு என்பன ரூபா 924.3 மில்லியன் தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. | இறக்கப்பட்ட அளவு காரணமாக அனல் நிலக்கரி இருப்பு 27,171.39 மெட்ரிக் தொன் வரை சேகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 14,964.71 மெட்ரிக் தொன் பச்சை நிலக்கரி எதிர்மறை இருப்பு நிரப்பப்பட்டதால் இந்த அளவு 12,206 மெட்ரிக் தொன்னாக குறைந்தது. எனவே அனல் நிலக்கரியின் சரியான பௌதீக இருப்பு 12,206 மெட்ரிக் தொன்னாக இருந்தது. 15.09.2023 அன்றைய நிலவரப்படி அனல் நிலக்கரியின் ஏட்டு இருப்பு 36,457.76 மெட்ரிக் தொன்னாக காணப்பட்டதன் விளைவாக நிலக்கரி இருப்பு 24,251.08 மெட்ரிக் தொன் என கணக்கெடுப்பு சபையால் தீர்மானிக்கப்பட்டது. எனவே, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான இலாபம் மற்றும் நிலக்கரி இருப்பு ஆகியவை குறைத்து மதிப்பிடப்படவில்லை. | வேண்டுமென்பதுடன் பௌதீக இருப்பு கணக்கீடு சரியானதாகவும் முழுமையாகவும் இருக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவேட்) லிமிடட் இற்கு (லெகோ) மின்சக்தி விற்பனையிலிருந்து கிடைத்த வருமானமானது 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டிற்கான அலகு விலைக்கான தேசிய சுங்கவரி சீரமைப்பு (UNT) மதிப்பீடுகளை கணக்கிடாமையினால் அல்லது அவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்யாமையினால் ரூபா 1,120.1 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட் டுள்ளது. எனவே, மதிப்பாய்வு செய்யப்பட்ட | இ.பொ.ப.ஆ இடமிருந்து தீர்மான ஆவணங்களைப் பெற்றதன் பின்னர் UNT சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். எந்தவொரு காலாண்டிற்கும் UNT தீர்மான ஆவணங்கள் எதுவும் இதுவரை பெறப்படவில்லை என்பதால், அதிகாரப்பூர்வ ஆவணங்கள் கிடைக்கும் வரை குறிப்பிடப்பட்ட பிழையை சரிசெய்ய முடியாது | நான்கு காலாண்டு களுக்கும் நிதிநிலை அறிக்கைகளில் சீரான தேசிய கட்டணத்திற்கான சீராக்கல் செய்யப்பட வேண்டும். |

ஆண்டிற்கான இலாபம் அதே அளவு குறைவாக இருந்தது.

(ஈ) ரூபா 18,230 மில்லியன் பெறுமதியான முடிக்கப்பட்ட வேலைகளில் 8,574 வேலைகள் மூலதனமாக்கப்படாமல் முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ளன. இருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான இலாபத்தில் ஏற்பட்ட தாக்கம் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட வருவாய் ஆகியவற்றை தேய்மானத்திற்கு வழிவகை செய்யாததாலும் போதிய தகவல் இல்லாததாலும் கண்டறிய முடியவில்லை. மேலும், மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், நிர்மாணப் பிரிவில் (தென் மாகாணம் 2) உள்ள ரூபா 2.98 மில்லியன் பெறுமதியான இரண்டு வேலைகள், ஜா-எல பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கான ரூபா 113.99 மில்லியன் செலவு மற்றும் மூன்று கட்டிடங்கள் மற்றும் விநியோகப் பிரிவு 04 இல் உள்ள கதிர்காமம் வீதி விளக்கு (KSTS) நிர்மாண செலவு ரூபா 135.61 மில்லியன் போன்ற அனைத்து நிர்மாணப் பணிகளும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டு சபையினால் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவை மூலதனமாக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், முடிவுறா வேலையில் உள்ள மேற்படி பணிகளில் மீதமுள்ள பணிகளில், ரூபா 40.15 மில்லியன் 5 வருடங்களுக்கு மேலாக விநியோகப் பிரிவு 04 இல் அமைச்சின் நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வேலைகளாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு இறுதியிலும் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அவற்றின் விவரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**விநியோகப் பிரிவு 01**

முடிக்கப்பட்ட பணிகளை நிரந்தர அடிப்படையில் சொத்துக்களாக மாற்றுவதற்கான தொடர் நடவடி க்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**விநியோகப் பிரிவு 02**

2024.10.31 ஆம் திகதியுடன் முடிவ டைந்த காலப்பகுதியில் முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 3,897 மில்லியன் செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு சொத்துக்களுக்கு மாற்றப்பட்டுள் ளன. மேலும், ஜா-எல பகுதி பொறி யாளர் அலுவலகத்தை நிர்மாணிப்ப தற்கான செலவு ஏற்கனவே ஏப்ரல் 2024 இல் சொத்துக்கு மாற்றப்பட்டு ள்ளது.

**விநியோகப் பிரிவு 03**

DD3 தொடர்பான இரண்டு ஆண்டுகளில் 1,913 வேலைகளில், 1,217 வேலைகள் (64%) அக்டோபர் 2024 இறுதிக்குள் ரூபா 1,816 மில்லியன் மதிப்பில் தீர்க்கப்பட் டுள்ளன.

**விநியோகப் பிரிவு 04**

முடிவுறா வேலையினை கண்காணிப் பதற்காக துணைப் பொது முகாமையாளரின் மேற்பார்வையுடன் சம்பந்தப்பட்ட அலகு தலைவர்கள் மற்றும் கணக்காளர் செலவினங்க ளுக்கிடையில் தொடர்ச்சியான கூட்டங்கள் மேற்கொள்ளப்படு கின்றன. மேலும், முடிவுறா வேலை தொழில்களின் மூலதனமயமாக் கலை துரிதப்படுத்துவதற்கும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் அறிக்கைகளை இறுதிப் படுத்துவதற்கு முன்னர் முன்னேற்ற த்தை எங்களுக்கு அறிவிப்பதற்கும் உரிய பிரிவுக்கு அறிவிக்க நிதிப் பிரிவினால் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ள மீதமுள்ள முடிக்கப் பட்ட வேலைகளை மூலதனமாக்க உடனடி நடவடிக் கைகள் எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (உ) | விநியோகப் பிரிவு 01, 02 மற்றும் 03 இல் 122 தொழில்கள் தொடர்பான அசாதாரண கடன் நிலுவைகளை விடுவிக்கப்படாமல் ஈடுசெய்ததன் காரணமாக முடிவுறா வேலை மீதி ரூபா 93.7 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டுள்ளது. | **விநியோகப் பிரிவு 01**<br>அத்தகைய நிலுவைத் தொகையை தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட கணக்காளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.<br><br>**விநியோகப் பிரிவு 02**<br>முடிவுறா வேலைகள் கணக்கில் செய்யப்பட்ட பெரும்பாலான செலவின பதிவுகள் பல்வேறு காரணங்களால் வேலைகள் இரத்து செய்யப்பட்டதால் திரும்பிய பொருட்களின் கிரயத்தை அல்லது தொழிலின் பொருட் கிரயத்தின் மீதியைக் குறிக்கிறது.<br><br>**விநியோகப் பிரிவு 03**<br>செலவு மீதிக்கான முக்கிய காரணம் பொருள் இயக்கங்களில் உள்ள விலை வேறுபாடு (விலை மாறுபாடு) ஆகும். இந்த நிலுவைத் தொகைகள் அனைத்தும் இப்போது தீர்க்கப்பட்டுள்ளன. | முடிவுறா வேலைகள் கணக்கில் உள்ள அசாதாரண செலவு நிலுவைகளை விசாரித்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | புத்தளம் நிலக்கரி மின்னுற்பத்தி கருத்திட்டத்திற்காக (கட்டம் ii) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 124.30 மில்லியன் பெறுமதியான ஆறு வாகனங்கள் 2014 ஆம் ஆண்டில் கருத்திட்டம் நிறைவடைந்த பின்னரும் மூலதனமாக்கப்படவில்லை, அதற்கு பதிலாக, அந்தத் தொகை முடிவுறா வேலைகள் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், புத்தளம் நிலக்கரி மின் திட்டத்தின் (கட்டம் 1) கீழ் இயங்கும் இந்த ஆறு வாகனங்கள் மற்றும் 11 வாகனங்களின் கிரயமானது ஏற்கனவே குறித்த திட்டங்களின் கிரயத்தில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை சபைக்கு கையேற்று பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது, இலங்கை மின்சார சபை வழக்கு தாக்கல் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக வழிகாட் டலுக்காக எதிர்பார்ப்பதற்கும் தேவையான ஆவணங்களை பிரதான சட்ட அதிகாரி 2024 ஒக்டோபர் 03 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தார். | இந்த வாகனங்களை கையகப்படுத்தி, பாதுகாப்பில் வைத்து அவற்றை மூலதன மாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | ரூபா 113.87 மில்லியன் பெறுமதியான வழிச்சரக்குகளை புலனாய்வு செய்து தெளிவுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒரு வருடத்திற்கு மேலாக கணக்குப் புத்தகங்களில் இருந்துள்ளது. விநியோகப் பிரிவு 01 இல் | **விநியோகப் பிரிவு 01**<br>இது தொடர்பாக சில ஆவண ஆதாரங்களை கண்டுபிடிப்பது கடினமாக உள்ளதால் ஆவண ஆதாரங்கள் கிடைத்தவுடன் அத்தகைய நிலுவைகள் தீர்க்கப்படும். | வழிச்சரக்கு மீதிகளில் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள இருப்புகளை விசாரித்து அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | வழிச்சரக்கில் மீதமுள்ள ரூபா 129.52 மில்லியனில் ரூபா 34.56 மில்லியன் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சரக்குகள் 5 வருடங்களுக்கு மேலாக வழங்குனர்களிடம் எஞ்சியுள்ளன. மேலும், விநியோகப் பிரிவு 02 இன் வழிச்சரக்கு மீதி ரூபா 432.3 மில்லியனில், ரூபா 142.61 மில்லியன் அல்லது 33 சதவீதமானது ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு சுமார் 2 வருட காலப்பகுதியில் பயன்படுத்த முயடிாத நிலையிலுள்ள அலுமினிய இருப்புக்களின் (918,830 கிலோகிராம்) பெறுமதியைக் குறிக்கிறது. எவ்வாறாயினும், 2021 செப்டெம்பர் 23 ஆம் திகதியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 2021/GM/40/DCC இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த நிறுவனத்திடமிருந்து சபைக்கு பெறத்தக்க மீதியாக அது கணக்கிடப்படவில்லை. | **விநியோகப் பிரிவு 02**<br>இலங்கை எனர்ஜீஸ் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்ட பயன்படுத்த முடியாத அலுமினியக் கம்பிகளை தவிர்ந்த, ரூபா 36 மில்லியனில், 4-5 வயது முதிர்ந்த ரூபா 1.3 மில்லியன் தொகை 2024 ஜூன் மாதம் கணக்குகளில் தீர்க்கப்பட்டதுடன் மீதமுள்ள ரூபா 33.4 மில்லியனுக்கான கேள்விகோரல் ஆவணங்கள் P&D கிளைக்கு அனுப்பப்பட்டு DD2 இன் P&D கிளையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>**விநியோகப் பிரிவு 03**<br>இந்த விடயம் சப்ரகமுவ மற்றும் WPS 2 மாகாணங்களுடன் தொடர்பு டையது. ஓராண்டில் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்படும்.<br><br>**விநியோகப் பிரிவு 04**<br>WPS1 இல் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள சரக்குகள் வழிச்சரக்குகளாக அனுமதித்துள் ளதுடன் 2024 ஜூன் இல் கணக்கு புத்தகத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தென் மாயாணம் 2 இல் உள்ளவை ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஏ) | 2019 செப்டெம்பர் 24 ஆம் திகதியிடப்பட்ட 19/2622/113/074 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக லக்விஜய மின்னுற்பத்தி நிலைய விரிவாக்கல் கருத்திட்டத்திற்கான கருத்திட்ட முகாமைத்துவ அலகு ஒன்றை சபை நிறுவியுள்ளது. அதனைத் தொடர்ந்து, செயற்திட்டத்திற்காக ரூபா 167.31 மில்லியன் தொகை செலவிடப்பட்ட பின்னர், 2021 செப்டெம்பர் 13 ஆம் திகதி அமைச்சரவையினால் எடுக்க ப்பட்ட அரசாங்க கொள்கைக்கு அமைய 2021 ஒக்டோபர் 26 ஆம் திகதி கருத்திட்டத்தை மூடுவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தி ருந்தது. எவ்வாறாயினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி ரூபா 167.62 மில்லியன் தொகை ஆண்டின் இலாபத்திற்கு எதிராக | பதிவழிப்பதற்கான ஒப்புதலைக் கோரி ஏஜிஎம் (திட்டங்கள்) ஒரு பணிப்பாளர் சபை பத்திரத்தை சமர்ப்பித்துள்ளதுடன் இந்த விடயத்தில் பணிப்பாளர் சபையின் தீர்மானம் இன்னும் நிலுவையில் உள்ளது. | நிதிநிலை அறிக்கை களில் மீதமுள்ள நிலுவைத் தொகை க்கு ஏற்பாடை மேற்கொள்ள அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சாட்டப்படாமல் மூலதன முடிவுறா வேலையின் கீழ் இருந்தது. | | |
| (ஐ) | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களின் பெறுமதியும் அவற்றின் திரட்டிய தேய்வும் லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்படாமையினால் சபையின் நிதிக் கூற்றுக்களில் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விவகாரம் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. இந்த மூன்று வாகனங்களின் மதிப்பு ஏற்கனவே ஏப்ரல் 2024 இல் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. | கணக்குப் புத்தகங் களிலும் நிலையான சொத்துப் பதிவேட் டிலும் பதியப்படா செதத்துக்களை பதிவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மகாவலி தொகுதியின் சிவில் வேலைகளின் கீழ் உள்ள ரூபா 34,386.77 மில்லியன் பெறுமதியான அணைக்கட்டு பணிகள் சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், மேற்படி தொகையின் சரியான தன்மை மற்றும் சொத்துக்களின் சபைக்குரிய உரிமை ஆகியவற்றை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | இந்த விவகாரம் குறித்து விவாதிப்பதற்காக 24.06.2024 அன்று எம்.ஏ.எஸ்.எல் அதிகாரிகளுடன் நாங்கள் ஒரு சந்திப்பை நடத்தினோம், அதில் 2023 ஆம் ஆண்டில் அணைகளின் செலவு அவர்களின் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவந்தது. எனவே, இரு நிறுவனங்களின் உயர் நிர்வாகத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க குழு முடிவு செய்தது. | அணைக்கட்டு வேலைகளின் சரியான பெறுமதியை யும் மற்றும் உரிமை யின் சரியான தன்மை யையும் நிதிநிலை அறிக்கைகளில் உறுதிப்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிராட்லேண்ட் நீர்வலு திட்டத்தின் கடன் நிலுவை மீதி தொடர்பில் மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட வங்கி மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் ரூபா 5,444.76 மில்லியன் நிலுவைத் தொகையாகக் காட்டப்பட் டுள்ளது. எவ்வாறாயினும், சபையின் பதிவுகளின்படி, இது ரூபா 5,494.76 மில்லியனாகும், எனவே ரூபா 50 மில்லியன் வித்தியாசம் அவதானிக்க ப்பட்டது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கிடைக்கப்பெற்ற வங்கியின் உறுதிப்படுத்தலுக்கு அமைய மின்சார வழங்கல் நம்பகத்தன்மையை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கடன் நிலுவை மீதி தொடர்பில் 57,338,901 அமெரிக்க டொலர்கள் நிலுவைத் தொகையாகக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், சபையின் பதிவுகளின்படி, இது 57,989,633 அமெரிக்க டொலர்கள் ஆக இருந்தது, எனவே 650,732 | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் இது ஏற்கனவே நிதி அறிக்கைகளில் சரிசெய்யப்பட் டுள்ளது. | வேறுபாடுகளைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்வதற்காக ஒரு கணக்கிணக்கக் கூற்றை தயாரிப்பதற்கும் கடன் நிலுவைகளில் அடை யாளம் காணப்பட்ட பிழைகளை கணக்குப் புத்தகங்களில் சீராக்கு வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமெரிக்க டொலர்கள் வித்தியாசம் காணப்பட்டது. | | |
| (ஆ) மீளாய்வாண்டுக்கான சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 308.1 மில்லியன் ரூபாவாகும். எவ்வாறாயினும், பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அதனுடன் தொடர்புடைய பெறுதற்குரிய மீதி ரூபா 3,529.6 மில்லியனாகவும், வேறுபாடு ரூபா 3,221.5 மில்லியனாகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | CPC க்கு செலுத்த வேண்டிய நிலுவை மற்றும் CPC இன் கணக்குகளில் அதனுடன் தொடர்புடைய பெறத்தக்க மீதி என்பன 2020 டிசம்பர் 31 வரை கணக்கிணக்கம் செய்யப்பட்டது. அமைச்சு அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மின்வலு அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் செயலாளரின் அறிவுறுத்தலின் படி நிலுவையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சுச் செயலாளரின் அறிவுறுத்தலின் படி வேறுபாடுகளை கணக் கிணக்கம் செய்வதற் கும் வேறுபாடுகளைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) விநியோகப் பிரிவு 1 இல் 2012 ஆம் ஆண்டு முதல் ரூபா 423.76 மில்லியன் இனங்காணப்படாத கடன்பட்டோர் மீதி நிலுவையில் உள்ளது. எவ்வாறாயினும், அதில் ரூபா 185.41 மில்லியன் 2015 முதல் 2023 வரை தாக்கத்துக்கு உட்பட்ட தனிப்பட்ட கடன்பட்டோர் கணக்குகளை ஆராய்ந்து சீராக்காமல் விநியோகப் பிரிவுகளின் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் பிற பொறுப்புக் கணக்குகள் போன்றவற்றிற்கு மாற்றப்பட்டுள்ளது. | ரூபா 423.76 மில்லியன் ஆரம்பப் பெறுமதியான கடன்பட்டோர் மீதியில் ரூபா 185.41 மில்லியன் AFM DD3 கிளையின் பேரேட்டு மீதியுடன் தமது சொந்த பட்டியலிடல் மற்றும் பேரேட்டு முறைமையை கணக்கிணக்கம் செய்த பின்னர் AFM(DD1)/ Acct(A&MI)/ Revenue Debtors /2018 ஆம் இலக்க 17 ஆகஸ்ட் 2018 தேதியிட்ட கடிதத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டு ள்ளது. இந்த தொகை 2002 ஆம் ஆண்டில் அதிகாரப்பரவல் செயல்பாட்டின் போது மாற்றப்பட்டிருக்கக் கூடும். மேலும், அனைத்து பிரிவுகளின் AFMM இற்கும் தாக்கத்துக்குட்பட்ட ஏதேனும் மீதி அவர்களின் பிரிவுகளில் உள்ளதா என்பதை சரிபார்க்க தெரிவிக்கப்பட்டுள்ளது. | பாதிக்கப்பட்ட கணக்கு களைத் துல்லியமாகச் சரிபார்த்து, அடையா ளம் காணப்படாத கடன்பட்டோர் நிலுவையை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கானது 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறு ரூபா 378.39 மில்லியன் வரவு மீதியையும் ரூபா 2,204.57 மில்லியன் செலவு மீதியையும் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 230.07 மில்லியன் மற்றும் ரூபா 465.81 மில்லியன் தீர்க்கப்படாது நிலுவையில் உள்ள முறையே வரவு மற்றும் செலவு மீதிகளின் கணக்கிணக்கம் | **விநியோகப் பிரிவு 01** கூட்டாண்மை அலுவலகத்தில் ரூபா 4.29 மில்லியன் காசோலைகள் மீள ஒப்படைக் கப்பட வேண்டியிருந்தது, அது தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர பணிப்பாளர் நாயகத்தைப் பொறுத்தவரையில், சாதாரண வழங்கல் நுகர்வோர் மற்றும் மொத்த நுகர்வோரின் காசு சேகரிப்பு சுழற்சி | சேகரிப்புக் கட்டுப்பாட் டுக் கணக்குகளிலுள்ள நீடண்டகால நிலுவை களை இனங்கண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்வுக்கு கிடைக்கவில்லை. எனவே, சேரிப்புக் கட்டுப்பாடு கணக்கு மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்க்க இயலவில்லை. மேலும், தலைமையகத்தில் இனங்காணப்படாத ரூபா 12.75 மில்லியன் ஆரம்ப வரவு மீதி 5 வருடங்களுக்கு மேலாக இருப்பதையும், WPS (ii) மற்றும் சப்ரகமுவ மாகாணத்தில் ரூபா 95.27 மில்லியன் ஆரம்ப செலவு மீதி 1 வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒரே கணக்கில் இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. | காரணமாக நாட்காட்டி மாதத்தில் கடன் மீதி ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக, வருவாய் வழிகாட்டுக் குழுவின் வழிகாட்டுதலின்படி தகவல் தொழில்நுட்ப முறையை மேம்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடமேல் மாகாணம் 1 இல் மாதாந்த கணக்கிணக்கம் மேற்கொள்ளப்பட்டு வடமேல் மாகாணம் (2) இல் ரூபா 222 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது. வடமத்திய மாகாணத்தைப் பொறுத்தவரையில் 2011 ஆம் ஆண்டில் இணக்கமற்ற முறைமை சீராக்கல் காணப்படுகின்றது.<br><br>**விநியோகப் பிரிவு 02**<br>குறித்துக் கொள்ளப்பட்டது. கணக்கை கணக்கிணக்கம் செய்யும் வேலை இடம்பெற்று வருகின்றது.<br><br>**விநியோகப் பிரிவு 03**<br>WPS 2 மற்றும் சப்ரகமுவ மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகைக்கான காரணங்களை ஆராய்ந்து அதற்கேற்ப மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**விநியோகப் பிரிவு 04**<br>முன்னைய காலமாக ஒரு கணக்கு பேணப்பட்டு வந்ததுடன், இக்கணக்கை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்படும்<br><br>**தலைமையகம்**<br>பெரும்பாலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விடயங்கள் 2024 ஆம் ஆண்டில் தீர்க்கப்படும். | |
| (உ) 1998 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 75.27 மில்லியன் தொகையை நிரூபிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாம | இலங்கை மின்சார சபை ஆரம்பத்தில் சரியான வாடிக்கையாளர் கணக்கை அடையாளம் காண முடியாத அல்லது வருமானத்திற்கு கட்டணம் வசூலிக்கப்பட | தொங்கல் கணக்கை அகற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| லேயே விநியோகப் பிரிவுகளின் தொங்கல் கணக்கில் சேர்க்கப்பட் டுள்ளது. | வேண்டுமா என்பதை தீர்மானிக்க முடியாத தொகைகளுக்கு தொங்கல் கணக்கு பயன்படுத் தப்படுகிறது. தபால் நிலைய ங்கள், மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்ற முகவர்களி னூடாக பிழையான கொடுப்பனவு களை இனங்கண்டு திருத்துவத ற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | |
| (ஊ) சபையின் சொத்து முகாமைத் துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் தொடர்பில் 39 அரச நிறுவனங்களிடமிருந்து (அரசாங்க சுகாதாரத் துறையில் உள்ள 35 நிறுவனங்கள் உள்ளடங்கலாக) பெறத்தக்க எஞ்சிய தொகை தொடர்பில் ரூபா 159.47 மில்லியன் மொத்த வேறுபாடு அவதானிக் கப்பட்டது. எவ்வாறாயினும், குறித்த அரச நிறுவனங்களுடன் இணைந்து மீதமுள்ள நிலுவையை சமப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | DGM (W&AS) இன் பதிவுகளின்படி, இ.மி.ச பேரேட்டில் காட்டப்பட்டுள்ள மீதிகள் சரியானவை. எவ்வாறாயினும், குறித்த அரச நிறுவனங்களுடன் மீதிகளை கணக்கிணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | அரச நிறுவனங்களிட மிருந்து பெறவேண்டிய தொகைகளை உறுதிப் படுத்துவதற்கும் சிக்க லான வேறுபாடுகளை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) சபை மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் இற்கு இடையே கைச்சாத்திடப்பட்ட மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் (PPA) 09 ஆவது பட்டோலையிலுள்ள 02 ஆம் பிரிவின் படி, மின்வலு ஆலையின் உண்மையான செயலாற்றலின் அடிப்படையில் சபைக்கு ஏதேனும் நன்மை பயக்கும் மாற்றங்களை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, அட்டவணை ஏ2 இலுள்ளவாறு “ஒப்புக்கொண்ட அளவுருக்கள் மற்றும் மதிப்புகள்” இன் ஒருங்கிணைந்த சுழற்சி மதிப்புகளை பகுப்பாய்வு செய்வதற்காக, காலத்தின் முதல் ஆண்டின் இறுதியில் சந்திப்பதற்கு இரு தரப்புகளும் ஒப்புக்கொண்டன. இருப்பினும், சபையின் பணிப்பாளர் சபை, அந்த மாற்றியமைக்கப்பட்ட மதிப்புகளுக்கு நிறுவனத்தின் உடன்பாடு இல்லாமல், 2019 பெப்ரவரி 15 அன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் மாதாந்த விலைப் பட்டியல்களை சான்றளிப்பதற்காக உடனடியாக அமலுக்கு வரும் | இ.மி.ச. இன் பரிமாற்ற - எரிசக்தி கொள்முதல் கிளையின் புத்தகங்களின்படி, 2023 டிசம்பர் 31 நிலவரப்படி வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடெட்டின் மீதி ரூபா 50,032.3 மில்லியன் ஆகும். | சச்சரவுகளைத் தீர்க்க வும், நிலுவையில் உள்ள செலுத்த வேண்டிய தொகைகள் ஏதேனும் இருந்தால் அவற்றைத் தீர்க்கவும் இரு தரப்பினரின் PPA உடன்படிக்கையிலுள்ள அளவுருக்களுக்கான மதிப்புகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வகையில் சில ஒருங்கிணைந்த சுழற்சி அளவுருக்களின் மதிப்புகளை ஒரு இடைநிலை தீர்வாக மாற்றியமைக்க ஒப்புதல் அளித்தது. அதன்படி, நிறுவனம் கூட PPA இல் குறிப்பிடப் பட்டுள்ள அளவுருக்களுக்கான மதிப்புகளின் அடிப்படையில் தங்கள் மாதாந்த விலைப்பட்டியல்களை தொடர்ந்து சமர்ப்பித்திருந்த போதிலும், 2019 பெப்ரவரி முதல் நிறுவனம் சமர்ப்பித்த மாதாந்த விலைப்பட்டியல்கள், அளவுருக் களுக்கான குறைக்கப்பட்ட மதிப்பு களைப் பயன்படுத்தி சபையால் சான்றளிக்கப்பட்டிருந்தன. இந்த சர்ச்சை காரணமாக, சபையின் கணக்குப் புத்தகங்களின்படி, 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 50,032.30 மில்லியனாகவும், நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்க ளின் படி தொடர்புடைய மதிப்புகள் ரூபா 85,561.9 மில்லியனாகவும் இருந்தது. எனவே, ரூபா 35,529.6 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது. இருப்பினும், மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் கூட வேறுபாட்டை சரிசெய்து அவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.5.4 கணக்காய்வாற்கான சான்றுகள் இல்லாமை

| உருப்படி | தொகை ரூபா | கிடைக்காத சான்று | முகாமையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| குத்தகை கடன் வழங்குநர் | 39.8 மில்லியன் | மீதி உறுதிப் படுத்தல் | குத்தகை கடனீந்தோருக்கு மீதமுள்ள நிலுவைத் தொகையை கூடிய விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | குத்தகைக் கடன் வழங்குநர்களின் மீதி உறுதிப்படுத் தல்கள் நிதிநிலை அறிக்கைகளுடன் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.5 ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) இணக்கப்படுத்தப்படாத தொடர்பு டைய தரப்பினர் வரவு மீதிகளான ரூபா 1,728.36 மில்லியன் மற்றும் செலவு மீதிகளான ரூபா 812.7 மில்லியன் முறையே ஏனைய கடன்பட்டோர் | துணை மீதிகளுடனான இடை வெளியைத் தெளிவாக சரிப்ப டுத்துவதற்கும் குறைப்பதற்கும், கணக்குகளை இறுதிப்படுத்தும் சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள வழிகாட்டல்களை கண்டிப்பாக | சரிசெய்யப்படாத தொடர் புடைய கட்சி நிலுவை களை அகற்ற உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் தீர்க்கப்படாமல் ஒன்றித்த கணக்கில் கணக்கிடப்ப ட்டுள்ளன. | கடைப்பிடிப்பதற்கும் நிதிப் பிரிவினால் உரிய நிறுவனங் களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ii) சபை மற்றும் லங்கா மின்சாரக் கம்பனி (பிரைவட்) லிமிற்றட் என்பவற்றின் தனிப்பட்ட நிதிக் கூற்றுக்களிலும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள ஓய்வூதிய அனுகூலப் கடப்பாட்டினைக் (பணிக்கொடை) கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கழிவு வீதம் மற்றும் பணியாளர் புரள்வு தொடர்பான உண்மை மதிப்பீட்டின் அனுமானங்களில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | இது தட்டச்சுப் பிழையாக இருப்பதுடன் திருத்தப்படும். | தாய் மற்றும் துணை நிறுவனங்களின் நிதி சாராத தரவுகளை நிதி அறிக்கைகளில் இருந்து ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளில் உள்வா ங்கும்போது உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**லங்கா கோல் கம்பனி (பிரைவேட்) லிமிற்றட்**

| | | |
|---|---|---|
| (iii) SLFRS 9 இன் பந்தி 5.5.15 (அ) இன் படி ஒரு வருடத்திற்கு மேலாக செலுத்த வேண்டிய ரூ.1,553 மில்லியன் வர்த்தக பெறுகைகளுக்கு கம்பனி ஏற்பாடு செய்யவில்லை. | இலங்கை மின்சார சபை அடுத்த நிதியாண்டில் வர்த்தகக் கடன்பட்டோர்கள் தொடர்பான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகளுக்கான வரலாற்று ரீதியான தற்போதைய மற்றும் முன்னோக்கிய காரணிகளைப் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் ஏற்பாடுகளின் தேவையை மதிப்பிடுவதற்கு கம்பனிக்கு அறிவிக்க தேவையான நடவடிக்கையை எடுக்கும். | கடன்பட்டோர் மதிப்பி ழப்புக்கான ஏற்பாடு களைச் செய்யும்போது SLFRS 09 இல் உள்ள விதிகளுக்கு இணங்க வேண்டும். |
| (iv) நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்க நோக்கத்திற்கான மதிப்பைக் கண்டறிவதற்கான ஒரு கருத்தியல் சரிசெய்தலாக சுங்க முனையலுள்ள பெறுமதியில் 10 சதவீத இலாப எல்லை சேர்க்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான வருமானத்தில் ரூபா 14,904.63 மில்லியன் தொகைக்கு நிறுவனம் 10 சதவீத இலாப எல்லையை சேர்த்திருந்ததுடன், பின்னர், அந்தத் தொகை கடன்பட்டோர் கழிவுகளாக அங்கீகரிக்கப்பட்டு விற்பனைக் கிரயத் துக்கு சரிசெய்யப்பட்டது. இதன் விளைவாக, SLFRS 15 இல் குறிப்பிட ப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, மீளாய்வாண்டிற்கான விற்பனை மற்றும் விற்பனைக் கிரயம் என்பன அதே | IRD அறிவுறுத்தல்களுக்கு இணங்க, நிறுவனம் 10 சதவீத இலாப எல்லையை சேர்த்து வருமானம் சரிசெய்யப்பட்டது. இந்த சரிசெய்தல் நிதி அறிக்கைகளில் வெளிப்படை யாக வெளிப்படுத்தப்பட வில்லை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். முன்னோக்கி நகரும்போது, SLFRS 15 மற்றும் பிற பொருந்தக்கூடிய அறிக்கை யிடல் நியமங்களுடன் வெளிப்ப டைத்தன்மை மற்றும் இணக்க த்தை உறுதிப்படுத்த பொருத்த மான வெளிப்படுத்தல்களை நாங்கள் சேர்ப்போம். IRD உடன் | வருமானத்தை அங்கீகரி க்கும் போது SLFRS 15 இல் குறிப்பிட ப்பட்டுள்ள ஏற்பாடுக ளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொகைகளால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.ஆர்.டி வழங்கிய அறிவுறுத்தலின்படி மேற்கண்ட சரிசெய்தல் நிறுவனத்தால் கணக்கிடப்பட்டது. ஆனால், நிதிநிலை அறிக்கையில் அது வெளிப்படுத்தப்படவில்லை. | கலந்தாலோசித்து இந்த பரிகாரத்தை நாங்கள் மறுமதிப்பீடு செய்வோம், மேலும் தெளிவு மற்றும் இணக்கத்தை மேம்படுத்த அடுத்தடுத்த நிதி அறிக்கைகளில் தேவையான விளக்கக் குறிப்புகளைச் சேர்ப்போம். | |

**லங்கா மின்சார கம்பனி (தனியார்) லிமிற்றட்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (v) நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்பின் பந்தி 5.5 இன் படி, கொடுக்கல் வாங்கல்கள் அல்லது பிற நிகழ்வுகளிலிருந்து எழும் சொத்துக்கள் அல்லது பொறுப்புகளின் ஆரம்ப அங்கீகாரம், வருமானம் மற்றும் தொடர்புடைய செலவுகள் இரண்டையும் ஒரே நேரத்தில் அங்கீகரிக்கலாம். வருமானம் மற்றும் தொடர்புடைய செலவுகளை ஒரே நேரத்தில் அங்கீகரிப்பது சில நேரங்களில் வருமானத்துடன் செலவுகளை பொருத்துவது என்று குறிப்பிடப்படுகிறது. எவ்வாறாயினும், 2017 முதல் 2023 வரையிலான காலப்பகுதிக்கு (2021 தவிர) கொள்வனவு செய்யப்பட்ட சூரிய சக்தியின் விற்பனை வருமானம் அந்தந்த ஆண்டுகளில் விற்பனையாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,658.2 மில்லியன் பெறுமதியான சூரிய சக்தியின் கொள்வனவு செலவு அந்தந்த ஆண்டுகளில் விற்பனைக் கிரயமாக அங்கீகரிக்கப்படுவதற்கு பதிலாக இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறத்தக்கதாக அங்கீகரிக்கப்பட்டிரு ந்தது. இதன் விளைவாக, 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுள்ளவாறு நிறுத்தவைக்கப்பட்ட வருமானங்கள், ஆண்டுக்கான இலாபம் மற்றும் பெறத்தக்க மீதி என்பன முறையே ரூபா 2,819.6 மில்லியன், ரூபா 1,838.6 மில்லியன் மற்றும் ரூபா 4,658.2 மில்லியனால் மிகைப்படுத்தப்பட்டுள்ளன. | இ.மி.ச மற்றும் இ.பொ.ப.ஆ ஆகியவற்றுடன் நடத்திய கலந்துரையாடல்களின் பின்னர், இலங்கை மின்சார சபை 2022 ஆம் ஆண்டிற்கான UNT சீராக்கலாக 2024 மே மாத மின்சார கட்டணத்திலிருந்து கழிப்பதன் மூலம் ரூபா 1,544,458,302 ஐ திருப்பிச் செலுத்தியது. எனவே, இந்த விவகாரம் எதிர்காலத்தில் தீர்க்கப்படும். | வருவாய்க்கு பங்களித்த விற்பனை கிரயத்தை அங்கீகரிப்பது தொடர்பில் நிதி அறிக்கையிடலுக்கான கருத்தியல் கட்டமைப்புடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (vi) 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பல்வகைச் சேவைகளுக்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து நிலுவையில் உள்ள மீதி ரூபா 5,777.8 மில்லியன் ஆகும். அதில் 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான தேறிய கணக்கீடு மற்றும் தேறிய பிளஸ் முறைகளைப் பயன்படுத்தி மின்சாரத்தை கொள்வனவு செய்வத ற்கான செலவுக்காக இலங்கை மின்சார சபையிடமிருந்து நிலுவை யாக ரூபா 5,770.6 மில்லியன் சேர்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம், நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை எதுவும் இல்லை என்பதை இலங்கை மின்சார சபை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், தேறிய கணக்கீடு மற்றும் நிகர பிளஸ் முறைகளைப் பயன்படுத்தி மின்சார த்தை கொள்வனவு செய்வதற்கு இரு தரப்பினருக்கி டையில் முறையான ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப்படவில்லை. ஆகையால் அந்த மீதியின் அறவிடக்கூடிய தன்மையை கணக்காய்வில் திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாமல் போனது டன், மேற்படி பெறுதற்குரிய மீதிக்காக ரூபா 5,300.9 மில்லியன் தொகையை மதிப்பிழப்புச் செய்வத ற்கு கம்பனியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | இ.மி.ச மற்றும் இ.பொ.ப.ஆ ஆகியவற்றுடன் நடத்திய கலந்துரையாடல்களின் பின்னர், இலங்கை மின்சார சபை 2022 ஆம் ஆண்டிற்கான UNT சீராக்கலாக 2024 மே மாத மின்சார கட்டணத்திலிருந்து கழிப்பதன் மூலம் ரூபா 1,544,458,302 ஐ திருப்பிச் செலுத்தியது. எனவே, இந்த விவகாரம் எதிர்காலத்தில் தீர்க்கப்படும். | குறித்த தரப்பு மீதிகள் தொடர்பான பிணக்கு களைத் தீர்ப்பதற்கும் சபையுடன் முறை யான ஒப்பந்த மொன்றைச் செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vii) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் நியதிகளின்படி, சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனளிக்கும் ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், எதிர்பார்ப்புகள் முன்னைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபடுமாயின், அந்த மாற்றம் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 8 இற்கு இணங்க கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு 4 வகைகளுடன் தொடர்புடைய ரூபா 11,114.4 மில்லியன் பெறுமதியைக் கொண்ட சொத்துக்கள் மதிப்பாய்வு | வளக் கட்டுப்பாடுகள் மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் மாறுபட்ட தன்மை காரணமாக, 4 வகை சொத்துக்களின் வருடாந்த மதிப்பாய்வுக்கு அதிக நேரம் எடுக்கும். எவ்வாறாயினும், முன்னோக்கிச் செல்லும்போது, சொத்துக்களின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஆகியவை மதிப்பாய்வு செய்யப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம் மற்றும் மதிப்பீடுகளில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின் LKAS 8 க்கு இணங்க அங்கீகரிக்கப்படும். . | ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் முழுமையாக தேய்மானமிடப்பட சொத்துக்கள் தொடர் பாக LKAS 16 இல் உள்ள ஏற்பாடுக ளுடன் இணங்கி யொழுகப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டு நியமத்தின் தேவைக் கேற்ப கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (viii) ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கும் அன்டி லெகோ மீட்டரிங் கம்பனி (பிரைவேட்) லிமிற்றட் மற்றும் லெகோ ப்ரொஜெக்ட் (ப்ரைவட்) லிமிற்றட் ஆகியவற்றின் நிதிக்கூற்றுக்கும் இடையே வருமானம், விற்பனைக் கிரயம், வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய தொகைகள் தொடர்பில் முறையே ரூபா 398.7 மில்லியன் மற்றும் ரூபா 50 மில்லியன் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | இந்த விடயம் 31 டிசம்பர் 2024 நிலவரப்படி ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளில் சரிசெய்யப்படும் | தாய் மற்றும் ஒவ்வொரு துணை நிறுவனத்தின் வரிசை உருப்படிகளை ஒன்றிணைத்து ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிக்கும்போது உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**1.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்களின் விபரம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ‘‘இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துதல்’’ தொடர்பாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட 2007 அக்டோபர் 31 தேதியிட்ட 07/1955/332/045 இலக்க அமைச்சரவைப் பத்திரம் 31 மார்ச் 2008 தேதியிட்ட தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அறிக்கை யுடன் 2008 ஏப்ரல் 09 ஆம் தேதி அமைச்சரவையால் பரிசீலிக்கப்பட்டதுடன் 31 மார்ச் 2008 தேதியிட்ட அதன் அறிக்கையில் தேசிய சம்பளம் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழு வகுத்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன. | | பணியாட்தொகுதியினருக்கான கொடுப்பனவுகளை வழங்குகையில் அமைச்சரவை தீர்மானம் மற்றும் தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (i) தேசிய சம்பளம் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் அனுமதியினை பெற்றுக்கொள்ளாதும், 2008 ஏப்ரல் 09 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் பட்டியலில் உள்ளடக் கப்படாததுமான 11 வகையான கொடுப்ப னவுகளாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ரூபா 507.47 மில்லியன் செலுத்தப் பட்டுள்ளது. | இது தொடர்பாக குழு நியமிக்கப்பட்டு, அவர்களின் அறிக்கை பொருத்தமான நடவடிக்கைக்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. | பணியாட்தொகுதியினருக்கான கொடுப்பனவுகளை வழங்குகையில் அமைச்சரவை தீர்மானம் மற்றும் தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) தொழில்சார் கொடுப்பனவு பெறுவதற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு வெளியேறும் கொடுப்பனவு வழங்கப்படக் கூடாது. அதற்கு மாறாக மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் முதல் 10 மாதங்களில் 517 அதிகாரிகளுக்கு வெளியேறும் கொடுப்பனவாக ரூபா 99.85 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | இது தொடர்பாக குழு நியமிக்கப்பட்டு, அவர்களின் அறிக்கை பொருத்தமான நடவடிக்கைக்காக அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. . | பணியாட்தொகுதியினருக்கான கொடுப்பனவு களை வழங்குகையில் அமைச்சரவை தீர்மானம் மற்றும் தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (iii) மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனை யின் பிரகாரம், ஒரு பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு அந்த பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படுவது அவதானிக்கப்பட்டது. | அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) அறிவுறுத்தலின் படி 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு தேவையான அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரிடம் 2024.06.24 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பொது முகாமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். | பணியாட்தொகுதியினருக்கான கொடுப்பனவு களை வழங்குகையில் அமைச்சரவை தீர்மானம் மற்றும் தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (iv) மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக, 2008 ஏப்ரல் 01 ஆம் திகதிக்குப் பின்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட வருட இறுதி வரையிலும் செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை. | ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு விரிவான செயல்திறன் மதிப்பீட்டு செயல்முறையின் அடிப்படையில், குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பணியமர்த்தப்படுபவர்கள் உட்பட அனைத்து ஊழியர்களுக்கும் சம்பள உயர்வுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. | செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பான அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்கியொழுகுதல் வேண்டும். |
| (ஆ) பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி, சலுகையுடன் கூடிய வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் ஊழியர்களால் பெறப்பட்ட ஆதனக் கடன்களுக்காக அறவிடப்பட்ட வட்டியில் 2/3 வீதத்தை சபை மீளச் செலுத்தியிருந்தது. 2013 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மீளச் செலுத்திய வட்டி தொகை ரூபா 16,789.5 மில்லியன் ஆகும்.. | 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின் 12 கே), (எம்) மற்றும் (என்) பிரிவுகளின் கீழ் அதற்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்க ளின் கீழ் சபையானது 1983 ஆம் ஆண்டில் வீடமைப்புக் கடன் பெற்றிருந்த இ.மி.ச பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தது. நிறுவன மற்றும் நாட்டின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதை நோக்கி ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக பணிப்பாளர் சபை இதுவரை ஊழியர்களுக்கு | மானியத்துடன் கூடிய வாகனக் கடன் திட்டத்திற்கு பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த நன்மையை தொடர்ந்து பேணி வருகிறது. | |
| (இ) சமனலவெவ நீர்த்தேக்கத்திலிருந்து நீர்ப்பாசனத்திற்காக நீரை விடுவிப்பதற்காக 2023 ஆகஸ்ட் 7 ஆம் திகதி அமைச்சரவை அவசர நிலையை பிரகடனம் செய்ததுடன் 4 முதல் 6 மாதங்களுக்கு 100 மெகாவாட் மேலதிக மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியது. இதனைத் தொடர்ந்து, 2023 ஆகஸ்ட் 18 முதல் மேலதிகமாக 100 மெகாவாட் இயலளவைக் கொள்வனவு செய்வதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது. இலங்கை மின்சார சபை (இமிச) ACE Power Matara (23.75 MW) மற்றும் ACE Power Embilitiya (93 MW) ஆகியவற்றுடன் மின்வலுக் கொள்வனவு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டது. இருப்பினும், மொத்த கொள்முதல் 116.75 மெகாவாட் ஆனதுடன், இது ஆரம்பத்தில் அனுமதிக்கப்பட்ட வரம்பை விட அதிகமாக இருந்தது. | அவசர கால நிலைமை பிரகடனத்தின் காரணமாக 100 மெகாவொட் குறைநிரப்பு மின்சாரத்தை 4 முதல் 6 மாதங்களுக்கு மட்டுப்படுத்த ப்பட்ட காலத்திற்கு கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இ.பொ.ப.ஆ 2023 ஆகஸ்ட் 17 ஆம் திகதியிடப்பட்ட கடித இலக்க PUC/LIC/2023/CEB/11 இன் மூலம் 100 மெகாவாட் மின் உற்பத்தி திறனைச் சேர்ப்பதற் கான கொள்முதல் செயல்முறை யைத் தொடர அனுமதி வழங்கியது. மேற்கண்ட இரண்டு ஆலைகளின் திறன்மிக்க மின் உற்பத்தி திறன் 97.31 மெகாவாட் ஆகும். | அமைச்சரவை மற்றும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு அமைய மின்சாரக் கொள்வனவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன், மின்சாரக் கொள்வனவு ஒப்பந்த வரைபு இபொபஆ அங்கீகாரத் திற்காக அனுப்பப்படல் வேண்டும். |
| (ஈ) திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 43(7) ஆம் பிரிவின் கீழ் மேற்குறிப்பிட்ட குறைநிரப்பு மின்வலுக் கொள்வனவுகளுக்கான இபொபஆ அங்கீகாரம் வழங்கப்படாமையின் காரணமாகவும், கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்தி திறன் சேர்ப்பதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தி திறன் சேர்ப்பை விஞ்சியுள்ளதன் காரணமாகவும் (இ.பொ.ப.ஆ பணிப்பாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்ட 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதிய கடித இலக்கம் PUC/LIC/2023/TL/21 பணிப்பாளர் சபைக்கும் ACE Power Embilipitiya (Pvt) Ltd க்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை காரணமாகவும் திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 43(5) ஆம் பிரிவுக்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கான வரைவு மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையை இபொபஆ சமர்ப்பிக்கப்படுவதற்குப் பதிலாக இபொபஆ வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். (இ.பொ.ப.ஆ பணிப்பாளர் நாயகத்தினால் | மேலதிக மின்சாரக் கொள்வனவு செய்வதற்கு அவசர தேவைப் பாடு காணப்பட்டதாலும், மின்சார கொள்வனவு உடன்படிக்கையின் நிபந்தனை களை ஆய்வு செய்வதற்கு ACE Power Generation Matara (Pvt) Ltd ஆனது மேலும் கால அவகாசம் கோரப்பட்ட தாலும், இலங்கை மின்சார சபையானது 2023 ஆகஸ்ட் 18 ஆம் திகதி மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்காக கையளித்தல் கடிதத்தை வழங்கியதுடன் இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் மின்சக்தி கொள்வனவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு அதன் அங்கீகாரத்தை வழங்கியது பொபஆ 2023 ஆகஸ்ட் 18 ஆம் திகதிக்கு முன்னர் மின் உற்பத்தி நிலையங்களை இயக்குமாறு பணிப்புரை விடுத்திருந்ததாலும், அது ஏற்கனவே 11 நாட்கள் தாமதித்ததாலும், மேலும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக | அமைச்சரவை மற்றும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு அமைய மின்சாரக் கொள்வனவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுடன், மின்சாரக் கொள்வனவு ஒப்பந்த வரைபு இபொபஆ அங்கீகாரத் திற்காக அனுப்பப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2023 ஒக்டோபர் 02 ஆம் திகதியிடப்பட்ட PUC/LIC/2023/TL/17 ஆம் இலக்க கடிதம்). அதன்படி, திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் இ.பொ.ப.ஆ நிறுவனத்தினால் ஏ.சி.இ மின் மாத்தறை மின்னுற்பத்தி உற்பத்தி நிலையம் மற்றும் ஏ.சி.இ பவர் எம்பிலிபிட்டிய மின்னுற்பத்தி உற்பத்தி நிலையம் ஆகியவற்றுக்கு வழங்கப்படவில்லை. | இலங்கை மின்சார சபை 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதி ஏஸ் பவர் எம்பிலிபிட்டிய (பிரைவேட்) லிமிடெட் உடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. திருத்தப்பட்டவாறான 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 43 (5) பிரிவுக்கு இணங்க இலங்கை மின்சார சபை கிடைக்கக்கூடிய PPA ஐ அதே நாளில் (2023 ஆகஸ்ட் 29) இ.பொ.ப.ஆக்கு அனுப்பியிருந்தது. | |
| (உ) கூட்டு ஒப்பந்த வரைவின் ஏற்பாடுகளுக்கு அமைய, 2021 மே 10 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானம் 21/0786/318/025 இன் பிரகாரம் 2021 ஜூன் 15 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சம்பளம் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதன்படி, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 9,629.9 மில்லியன், 2022 ஆம் ஆண்டில் ரூபா 6,725.9 மில்லியன் மற்றும் 2023 ஆம் ஆண்டில் ரூபா 8,354.7 மில்லியன் ஆல் ஆளணி செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. | 2021 ஜூன் 15 அன்று நடைபெற்ற சிறப்பு வாரியக் கூட்டத்தின் போது, 2021.05.10 ஆந் திகதிய அமப/21/0786/318/025 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி 2021-2023 காலப்பகுதிக்கு சபை ஊழியர்களின் சம்பளத்தை 25 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்க பணிப்பாளர் சபை முடிவு செய்தது. | கூட்டு ஒப்பந்தத்தை சட்டபூர்வமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 31ஆம் திகதியுள்ளவாறான வர்த்தகக் கடன்பட்டோர் மீதியானது ரூபா 70,019.1 மில்லியனாகும். அதில் ரூபா 6,181 மில்லியன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் 6 மாதங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளது. மேலும், ரூபா 2,252.2 மில்லியன் 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ளது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று வர்த்தகக் கடன்பட்டோர் மதிப்பிழப்பாக சபையினால் செய்யப்பட்ட ஒதுக்கீடு, ரூபா 4,625.9 மில்லியன் ஆகும். இது தொடர்பில் மேலும் அவதானிப்புகள் பின்வருமாறு. | | |
| (i) மேற்குறிப்பிட்ட மொத்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 2,773.3 மில்லியன் | **விநியோகப் பிரிவு 01**<br>இறுதி செய்யப்பட்ட கடனாளிகளிடமிருந்து நிலுவையில் | கடன்பட்டோரிடமிருந்து நிலுவைத் தொகையை தாமத |

| | | |
|---|---|---|
| வகைப்படுத்தப்பட்டு நீண்ட காலமாக நிலுவையில் உள்ள தொகையை மீளப்பெறாத காரணத்தினால் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோர் மீதிக்கு (செயற்பா டற்ற கடனாளிகள்) மாற்றப்பட்டு ள்ளதுடன், இதில் ரூபா 1,106.6 மில்லியன் விநியோகப் பிரிவு 01 க்கு உரியது. | உள்ள நிலுவைத் தொகைகளை வசூலிக்க தொடர்ந்து வசூல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கை கடிதத்தை குறிப்பிட்ட வாடிக்கையாளர்களுக்கு அனுப்பவும், நடைமுறையின்படி பின்தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>**விநியோகப் பிரிவு 02**<br>இறுதியாக முடிக்கப்பட்ட மொத்த கடன்பட்டோரில், 2024 ஆம் ஆண்டில் முடிவடைந்த 05 மாத காலப்பகுதியில் கிட்டத்தட்ட ரூபா 940 மில்லியன் மீட்கப்பட்டுள்ளது.<br><br>**விநியோகப் பிரிவு 03**<br>இறுதி செய்யப்பட்ட கடனாளிகள் நிலுவைகளை தீர்ப்பதற்காக பிணை வைப்புகளிலிருந்து மீதிகளை அறவிடு தல், நினைவூட்டல்களை அனுப்புதல், நுகர்வோரின் செயலில் உள்ள கணக்கு களை அடையாளம் கண்டு மீதிகளை மாற்றுதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.<br><br>**விநியோகப் பிரிவு 04**<br>சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மின்றி வசூலிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) விநியோகப் பிரிவில் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோரில், ரூபா 1,983.3 மில்லியன் 3 வருட காலப்பகுதிக்கு மேல் நிலுவை யாகியிருந்தது. அதில் ரூபா 927.8 மில்லியன் விநியோகப் பிரிவு 01 இல் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோரைக் குறிக்கிறது. | **விநியோகப் பிரிவு 01**<br>மேலதிக பொது முகாமையாளர் - DD1 அவர்களின் அறிவுறுத்தலின்படி நீண்ட காலமாக தீர்க்கப்பட்ட கடனாளிகள் மீதிகளை வசூலிக்க பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.<br><br>1. மாகாண வருவாய்க் குழுக்களை நியமித்தல்.<br><br>2. நுகர்வோருக்கு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்புதல்.<br><br>3. இணைப்பு துண்டிப்பு திட்டங்கள், நுகர்வோர் விழிப்புணர்வு திட்ட ங்கள் போன்றவை<br><br>**விநியோகப் பிரிவு 02**<br>2023.12.31 ஆம் திகதி உள்ளவாறு மொத்த மொத்த வழங்குனர் இறுதி செய்யப்பட்ட கடனாளிகளில், 2024 ஆம் ஆண்டில் முடிவடைந்த 05 மாத காலப்பகுதியில் கிட்டத்தட்ட ரூபா 940 | சபையின் சுற்றறிக் கைகளுக்கு அமைய நீண்டகால மாக நிலுவையில் உள்ள கடன்பட்டோ ரிடமிருந்து நிலுவை தொகையை அறவி டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மில்லியன் மீட்கப்பட்டுள்ளது.<br><br>**விநியோகப் பிரிவு 03**<br>இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான இறுதி செய்யப்பட்ட கணக்குகளுக்கு நினைவூட்டல்களை அனுப்புதல், இயல்புநிலை இறுதி செய்யப்பட்ட நுகர்வோரின் செயலில் உள்ள கணக்குகளை அடையாளம் கண்டு மீதிகளை கணக்குகளுக்கு மாற்றுதல் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.. | |
| (iii) | DGM (தென் மாகாணம் 02) இல் 41,441 இணைப்புகளுடன் தொடர்புடைய ரூபா 104.39 மில்லியன் இறுதி செய்யப்பட்ட சாதாரண வழங்கல் கடனாளிகளில், ரூபா 33.65 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையில் உள் எது. மேலும், மேற்குறிப்பிட்ட இணைப்புகளில் 13,549 இணைப்புகளுடன் ஒப்பிடுகை யில் ரூபா 10.98 மில்லியன் செலவு மீதியாக எஞ்சியுள் ளமை அவதானிக்கப்பட்டது. எனினும் சபையின் சுற்று நிருபம் DCC/COM/03/2009 இன் பிரகாரம் அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது தவிர, முந்தைய நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்காமல் இறுதி செய்யப்பட்ட வாடிக்கை யாளர்களுக்கு புதிய இணைப் புகள் வழங்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. | SP-02 கடன் நிலுவைகளை முடித்து ள்ளதுடன் AGM (DD04) அங்கீகரிக்க ப்பட்ட ஆவணங்கள் அசாதாரண செலவு நிலுவைகளை அகற்ற IT பிரிவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது மூன்று பகுதிகளுக்கும் செய்யப்படுகிறது. | சபைச் சுற்றறிக்கை யின் பிரகாரம் இறுதி செய்யப்பட்ட கடன்பட்டோரிடம் மீதமுள்ள வரவு மீதிகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் புதிய இணைப்பொன்றை வழங்குவதற்கு முன்னர் அனைத்து நிலுவைத் தொகை களும் அறவிடப்பட் டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (iv) | 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி கிழக்கு, வடக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் நிலுவையிலுள்ள கடனாளிகள் தொடர்பில் நடத்தப்பட்ட கணக்காய்வு சோதனை சோதனையின் பிரகாரம், ரூபா 50,000 க்கு மேற்பட்ட மற்றும் ஒரு வருடத்திற்கு மேலாக எஞ்சியிருந்த 357 எண்ணிக்கையிலான | **விநியோகப் பிரிவு 01**<br>ஏஜிஎம் (DD1) இனால் நியமிக்கப்பட்ட குழு DD1 இன் மாகாணங்களின் பெறத்தக்க நிலையை மேம்படுத்தி மதிப்பாய்வு செய்துள்ளது. அதன்படி, பல கூட்டங்கள் நடத்தப்பட்டு, நீண்ட காலமாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கும், பெறத்தக்க நிலுவைத் தொகையை மேம்படுத்துவதற்கும் மாகாண டி.ஜி.எம் மற்றும் பகுதி பொறியாளர்களுக்கு இலக்குகள் | அதிக பட்டியல் பெறுமதியுடன் நிலுவையில் உள்ள கடன்பட்டோரை அறவிட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவையில் உள்ள ரூபா 39.65 மில்லியன் நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டன.<br><br>**விநியோகப் பிரிவு 03**<br>48 நுகர்வோர் கணக்குகளில், 19 வாடிக்கையாளர்கள் ஏற்கனவே நிலுவைத் தொகையை செலுத்தியுள்ளனர். மீதமுள்ள 29 கணக்குகள் ஏற்கனவே துண்டிக்கப்பட்டுள்ளன. | |
| (v) கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், நீண்ட காலமாக நிலுவையில் உள்ள ரூபா 12.21 மில்லியன் மின்சாரக் கட்டணங்களை செலுத்தாமையின் காரணமாக பாராளுமன்ற பிரதிநிதிகளின் குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்ட 46 மின்சார விநியோக கணக்குகள் ஆண்டின் இறுதியில் இறுதி (செயலற்ற) கடனாளிகளாக வகைப்படுத்தப்பட்டன. அவற்றில் ரூபா 11.66 மில்லியன் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையில் இருந்ததுடன், ரூபா 5.29 மில்லியன் ஐந்து வருடங்களுக்கு மேலாக மீளப்பெறப்படாமல் நிலுவையில் இருந்தது. | **விநியோகப் பிரிவு 01**<br>பாராளுமன்ற பிரதிநிதிகளிடமிருந்து நிலுவை நிலுவைகள் உள்ளதுடன், அவை மீட்கப்படாமல் உள்ளன என்று ஒப்புக் கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும், மேலதிக பொது முகாமையாளர் மற்றும் கொழும்பு நகர டி.ஜி.எம் அவர்களின் நெருக்கமான மேற்பார்வை மற்றும் அறிவுறுத்தல்களுடன், இலங்கை மின்சார சபை தற்போதைய பாராளுமன்ற பிரதிநிதிகளின் மீதியான 12.01 மில்லியன் ரூபாவை அறவிடக்கூடியதாக உள்ளதுடன், பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய தொடர்ச்சியான அறவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>**விநியோகப் பிரிவு 04**<br>பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலுவைகளை அறவிடுவதற்கு வர்த்தகக் கடனாளிகள் அறவிடல் முறைமை பயன்படுத்தப்படுகின்றது. SP02 மாகாணத்தில் கணிசமான அளவு மட்டுமே எஞ்சியுள்ளது. | நாடாளுமன்ற பிரதிநிதிகளின் குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகளில் நிலுவையில் உள்ள தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ஏனைய கடன்பட்டோரின் மீதி ரூபா 24,327.1 மில்லியனாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் முன்வைக்கப்படுகின்றன. | | |
| (i) மீளாய்வு செய்யப்பட்ட வருட இறுதியில் மின்சார விநியோகத் திற்காக ரூபா 256.91 மில்லியன் நிலுவையில் இருந்தது. அதில் ரூபா 70.14 மில்லியன் ஐந்து வருடங்களுக்கு மேலாக மீளப்பெறப்படாமல் நிலுவையில் இருந்தது. மேலும், விநியோகப் பிரிவுக்கு தொடர்புடைய 5 வருடங்க | **விநியோகப் பிரிவு 01/02/03**<br>புனித இடங்களின் மீதியை பதிவழிப்பதற்காக ஒரு பணிப்பாளர் சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>**விநியோகப் பிரிவு 04**<br>2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற புனித நினைவுச் சின்ன கண்காட்சிக்காக புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடமிருந்து 8.3 மில்லியன் ரூபா நிலுவையில் உள்ளது. | புனித இடங்களிலிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க உடனடியான மற்றும் நியாயமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதுடன் மீதிகளை பதிவழிப்பதற்கான முடிவுகளை எடுப்பதற்கு முன்பு |

| | | |
|---|---|---|
| ளுக்கு மேலாக முதுமையடைந்த புண்ணிய ஸ்தலங்களில் இருந்து ரூபா 42.5 மில்லியன் நிலுவை வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஹம்பாந்தோட்டை பிராந்திய பொறியியலாளர் அலுவலகம் தொடர்பில், தற்காலிக இணைப்புகளில் பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பாக மேலதிக பொது முகாமையாளர் (DD 04) 2010 ஏப்ரல் 26 ஆம் திகதி வழங்கிய வழிகாட்டுதலுக்கு முரணாக பாதுகாப்பு வைப்பு அல்லது மதிப்பிடப்பட்ட கட்டணத்தைப் பெறாமல் சில தற்காலிக இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. | இந்த நிகழ்வு அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையுடன் நடைபெற்றதுடன், புத்தசாசன, கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு ஆகியவற்றுக்கு தனித்தனியாக நிதி கோரி கடிதம் எழுதியுள்ளோம். இருப்பினும், இரு அமைச்சிடமிருந்தும் எங்களுக்கு சாதகமான கருத்துகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, இந்த தொகையை வசூலிக்க முடியாது என்று நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதன்படி, வழிபாட்டுத் தலங்களில் நிலுவைத் தொகையை தள்ளுபடி செய்வதற்கான அனுமதியைப் பெறுவதற்காக பொதுப்பணித் தாள் ஒன்று சமர்ப்பிக்கப்படும். | உரிய செயல்முறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேலும், மேலதிக பொது முகாமையாளரினால் (DD 04) வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி பாதுகாப்பு வைப்புத் தொகை அல்லது மதிப்பிடப்பட்ட கட்டணம் பெறாமல் எந்தவொரு தற்காலிக இணைப்புகளும் வழங்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ii) ரூபா 3,261.9 மில்லியன் ஏனைய கடன்பட்டோரில் உள்ளடங்கிய பற்பல கடனாளிகள் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையாகியுள்ள தொகையினைக் கொண்டிருந்தனர். அதில் ரூபா 677.59 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்ததுடன், ரூபா 329.38 மில்லியன் ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையில் இருந்தது. ஐந்து வருடங்களுக்கு மேலாக பெறத்தக்க மீதிகளில், 2013 ஆம் ஆண்டில் ரூபா 14.34 மில்லியன், ரூபா 155.61 மில்லியன் மற்றும் ரூபா 2.66 மில்லியன் முறையே நுகர்வோர் பல்பு கடன், நிறுவனங்களுக்கான தற்காலிக மின்சார விநியோகம் மற்றும் கொழும்பு நகர இறைவரி கருமபீடத்தின் பணப் பற்றாக்குறை ஆகியவற்றிலிருந்து பெறத்தக்கதாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு இறுதியிலும் அவற்றை மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | **விநியோகப் பிரிவு 01**<br>வட மாகாணத்துக்குரிய கடன் வசூல் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், நுகர்வோரிடமிருந்து கடன் தொகையை வசூலிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br><br>**விநியோகப் பிரிவு 02**<br>2024 ஆம் ஆண்டில் 5 மாத கடன்பட்டோரில் ரூபா 1.57 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதுடன் மஹிந்த சிந்தனைக்காக ரூபா 1.1 மில்லியன் தொகையை அறிவிடுதவற்காக சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>**விநியோகப் பிரிவு 03/04/ மின்பரிமாற்றம்**<br><br>நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**தலைமையகம்**<br>பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு விளக்குகளுக்காக நிலுவையில் உள்ள தொகையை வசூலிப்பதற்காக தற்போது மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகத்துடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. மீதமுள்ள தொகை உரிய நேரத்தில் இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலுடன் பதிவழிக்கப்படும். மக்கள் வங்கியில் பி.ஓ.எஸ் கருமபீடங்களை அமைப்பதற்காக (பி.ஓ.எஸ்) கருமபீடங்கள் மற்றும் | சில்லறைக் கடனாளிகளை வசூலிக்கும் செயல்முறையை துரிதப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

உபகரணங்களாக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 20.5 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ளவற்றை அந்தந்த கோட்டங்களுக்கு மாற்றுவதற்கு தலைமையகம் தேவையான ஏற்பாடுகளை செய்யும். ஏனைய அனைத்து பல்வகை மீதிகளும் அறவிடப்படுவதுடன், எஞ்சியுள்ள தொகைகள் பணிப்பாளர் சபையின் இணக்கத்துடன் கணக்கேடுகளிலிருந்து பதிவழிக்கப்படும்.

**மின்னுற்பத்தி**

2021 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஆண்டுகளில் லக்விஜய மின் ஆலைக்குரிய கையிருப்பு மேலதிகம் மற்றும் பற்றாக்குறை ஆகியவை 2024 ஆம் ஆண்டில் இயக்குநர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர் இருப்பு சீரமைப்புக் கணக்கிலிருந்து தீர்க்கப்படும்.

**செயற்திட்டப் பிரிவு**

பற்பல கடனாளிகள் கணக்குகளில் திட்டப் பிரிவு மீதி சரி செய்யப்பட்டுள்ளது.

**சொத்து முகாமைத்துவம்**

நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(iii) அனைத்து விநியோகப் பிரிவுகள், மின்னுற்பத்திப் பிரிவு மற்றும் சொத்து முகாமைத் துவப் பிரிவு ஆகியவற்றுக்கான மொத்தமாக ரூ.65.81 மில்லியன் கையிருப்புப் பற்றாக் குறை 1 வருடத்திற்கும் மேலாக பற்பல கடனாளி களிடம் இருந்ததுடன், அதில் 5 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்த மின் உற்பத்தி பிரிவில் லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்துடன் தொடர்புடைய கையிருப்பு பற்றாக்குறை ரூ.34.15 மில்லியனாகும். மேலும், மேற்படி களஞ்சியப் பற்றாக்குறையில், ரூபா 31.66 மில்லியன் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் அடையாளம் காணப்பட்டுள்ளது.
எவ்வாறாயினும், ரூபா 2.8

**லக்விஜய மின் ஆலை**

கையிருப்பு சீராக்க மீதியான ரூபா 34.15 மில்லியனை உள்ளடக்கிய மீதி சபையின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் 2024 இல் தீர்க்கப்படும்.

**விநியோகப் பிரிவு 01**

ரூபா 13.08 மில்லியன் தொகைக்காக சட்டப் பிரிவால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை, ஊழியர் பதவீக்கம் செய்யப்பட்டமை, சட்ட நடவடிக்கை நிலுவையில் உள்ளமை போன்ற விளக்கங்கள் வழங்கப்பட்டன.

**விநியோகப் பிரிவு 02**

ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பேரேட்டில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கான முடிவுக்காக காத்திருக்கிறது.

கையிருப்பு பற்றாக்குறையால் ஏற்பட்ட இழப்புகளை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து வசூலிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான இருப்பு இழப்புகளுக்காக மாத்திரமே அறவிடல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | **விநியோகப் பிரிவு 03**<br>கையிருப்பு பற்றாக்குறைக்கு தற்போது ள்ள பணியாளர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக வசூலிக்க இயலாத தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>**விநியோகப் பிரிவு 04**<br>நீண்டகாலமாக நிலுவையில் இருந்த விடயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட பிரிவுத் தலைவர்களுக்கு அறிவிக்கப் பட்டது. உரிய தகவல்கள் கிடைத்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iv) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு சபையின் சொத்து முகாமைத்துவப் பிரிவினால் மின்தூக்கிகள், குளிரூட்டிகள் மற்றும் மின்னாக்கிகள் என்பவற்றை வழங்குவதற்காக 98 அரச நிறுவனங்களிட மிருந்து ரூபா 435.52 மில்லியன் நிலுவையில் உள்ளது. அவற் றில் ரூ.153.03 மில்லியன் மற்றும் ரூ.83.41 மில்லியன் முறையே ஒரு வருடம் மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேலாக மீளப்பெறப்படாமல் நிலுவை யில் இருந்தது. மேலும், மீளாய்வு செய்யப்பட்ட வருட இறுதியில் ஊனத்துக்கான ஏற்பாடாக ரூபா 110.5 மில்லியன் மாத்திரமே வழங்கப் பட்டுள்ளது. | மின்தூக்கிகள், குளிரூட்டிகள் மற்றும் மின் ஜெனரேட்டர்கள் வழங்குவதற்காக அரசு நிறுவனங்களுக்கு நிலுவையில் உள்ள தொகையை வசூலிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | அரச நிறுவனங்களில் இருந்து நிலுவைத் தொகைகளை அறவி டுவதற்கான நடவடி க்கைகளை துரிதப்ப டுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | தௌரியன் இரும்பு மற்றும் உருக்குக் கம்பனி மற்றும் லிபர்ட்டி கமாடிட்டிஸ் லிமிடெட் ஊடாக லங்கா நிலக்கரி நிறுவனத்திடமிருந்து செலுத்த வேண்டிய ரூபா 714.96 மில்லியன் ஆறு வருடங்க ளுக்கு மேலாக மீளப்பெறப்ப டாமல் நிலுவையில் இருந்தது. | தௌரியன் இரும்பு மற்றும் எஃகு கம்பனியின் நிலுவைத் தொகை தொடர்பில் அமைச்சரவைக் குழு வொன்று நியமிக்கப்பட்டதுடன், இறுதி அறிக்கை தீர்வுக்கான துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. லிபர்ட்டி கமாடிட்டிஸ் விஷயத்தில், எல்.சி.சி ஒரு நடுவர் செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லங்கா நிலக்கரி கம்பனிக்கும் டவ்ரியன் இரும்பு மற்றும் உருக்கு கம்பனிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக 2024.06.19 ஆம் திகதி மின்சக்தி | எதிர்காலத்தில் இவ் வாறான கொடுக் கல் வாங்கல்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரால் மற்றொரு குழு நியமிக்கப்பட்டது. இ.மி.ச. இன் புத்தகங்களின் நிலுவையில் உள்ள தொகையை செலுத்துமாறு கோரி இ.மி.ச. இன் பொது முகாமையாளரால் 2024.05.10 ஆந் திகதி லங்கா கோல் கம்பனிக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. | |
| (vi) 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் வழங்கப்பட்ட தற்காலிக மின்சார இணைப்பு களிலிருந்து ரூபா 241.72 மில்லியன் நிலுவையில் உள்ளது. இதில் கொழும்பு நகர மாகாணத்தினால் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக மின் இணைப்புகளுக்காக ரூபா 189.67 மில்லியன் ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்தது. | கூட்டங்கள் மற்றும் நினைவூட்டல் கடிதங்கள் உட்பட கொடுப்பனவுகளை வசூலிக்க பலமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அரச நிறுவனங்கள் அவற்றின் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கான ஏற்பாடுகளை இதுவரை செய்யவில்லை. | தற்காலிக மின் இணைப்புகள் மூலம் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க திருத்திய இலங்கை மின்சார சபை சட்டத்தின் 7(1) மற்றும் 43(1) ஆம் பிரிவு. | ஒழுங்குபடுத்தல் தரப்பிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 2,957.3 மில்லியன் பெறுமதியான 27.31 Gwh எரிசக்தி, மின் பிறப்பாக்கத்திற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத இரண்டு சுயாதீன மின்வலு உற்பத்தியாளர் களிடமிருந்து (IPPs) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | நீர்ப்பாசனத் தேவைகளுக்காக சமனவெவ நீர்த்தேக்கத்திலிருந்து நீர் திறக்கப்பட்டதன் காரணமாக 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதிக்குள் தென் பிராந்தியத்தில் காணப்படும் துணை மின்னுற்பத்தி நிலையங்களிலிருந்து தேவையான குறைநிரப்பு மின்சாரத்தை கொள்வனவு செய்து நாடளாவிய ரீதியில் தடையில்லா மின்சாரத்தை வழங்குவதற்கு 2023 ஆகஸ்ட் 07 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அதன்படி, இலங்கை மின்சார சபை ஏஸ் பவர் ஜெனரேஷன் மாத்தறை (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்துடன் 94,500,000 kWH க்கான மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையிலும் மற்றும் ஏஸ் பவர் எம்பிலிபிடிய (பிரைவட்) லிமிடட் உடன் 06 மாத காலப்பகுதிக்கு 325,872,000 kWh க்கான மின்வலுக் | இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொள்வனவு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்தி ட்டது. மேற்கண்ட இரண்டு ஆலைகளின் திறன்மிக்க மின் உற்பத்தி திறன் 97.31 மெகாவாட் ஆகும். மேற்கண்ட கொள்முதல் முன்பு காலாவதியான பிபிஏக்களு க்கான நீட்டிப்பு அல்ல. நாட்டில் அறிவிக்கப்பட்ட அவசரகால நிலைமை யின் போது நாடளாவிய ரீதியில் தடையில்லா மின்சாரத்தை வழங்கு வதற்காக அமைச்சரவை தீர்மானங் களுக்கு இணங்க டெண்டராக இந்த முழு கொள்வனவு மேற்கொள்ள ப்பட்டது. | |
| (ஆ) 2021 நவம் பர் 17 ஆந் தேதியிட்ட பொது முயற் சிகள் திணை க்களத்தின் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களு க்கான செயல்பாட்டு கையேடு. | | | | |
| (i) | பிரிவு 3.5 | 2020 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விடு விக்கப்பட்ட ஊழியர்க ளுக்காக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் ரூபா 288.66 மில்லியன் தொகையை சபைக்கு மீளச் செலுத்த வேண்டும். இதற்கு மேலதிகமாக, 2014 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை சபையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (பிரைவேட்) லிமிடட் நிறுவனத்தின் பொது முகாமையாளராக கடமையாற்றும் ஒரு அதிகாரியின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு களாக சபையினால் ரூபா 24 மில்லியன் | இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட செலவுகளை மீளச் செலுத்துமாறு கோரி இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளரினால் மின்சார அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் ஏனைய அனுகூலங்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் பொது முகாமையாள ருக்கான சம்பளத்தை மீளச் செலுத்துதல் குறித்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொது முயற்சி கள் திணைக்க ளத்தின் வழிகாட் டுதல்களை கண்டிப்பாக பின் பற்றுவதை உறுதி செய்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலவு செய்யப்பட்டு ள்ளது. | | |
| (ii) | பிரிவு 7.7 | குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறை துணை கம்பனிகளின் செயலாற்றல் குறித்து கலந்துரையாட வேண்டுமென்ற நம்பகமான கடமை பணிப்பாளர் சபைக்கு இருந்த போதிலும், 2024 ஏப்ரல் இன் இறுதியில் கூட (தாய்க் கம்பனியின்) பணிப்பாளர் சபையால் துணைக் கம்பனிகளின் மதிப்பாய்வுக் கொள்கை நிறுவப்படவில்லை. | உத்தேச சீர்திருத்தங்கள் எட்டப்பட்ட பிறகு, மின்சாரத் துறையின் அனைத்து அம்சங்களையும் கையாள்வதற்காக ஒரு புதிய மின்சாரச் சட்டம் இயற்றப்படும். ஆகையால், இலங்கை மின்சார சபை நிறுவன மாற்றமொன்றின் செயன்முறையில் ஈடுபட்டுள்ளதால், துணைக் கொள்கை யொன்றை உருவாக்குவது தற்போது அவசியமில்லை என கலந்துரையாடலின் பின்னர் சபை தீர்மானித்தது. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றுவதை உறுதி செய்தல் வேண்டும். |
| (இ) | 2023 பெப்ரவரி 07 ஆம் திகதிய 23/0199/601/009 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம | 198/2024 மற்றும் 254/2024 இலக்கங்களைக் கொண்ட இரண்டு நீதிமன்ற வழக்குகளுக்காக அமைச்சரவை தீர்மானத்தின் தேவைக் கேற்ப கௌரவ சட்டமா அதிபரின் அனுமதியைப் பெறாது வெளி சட்டத்தரணியின் சேவை பெறப்பட்டு ள்ளது. அதன் விளைவாக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 7.6 மில்லியன் விலைப் பட்டியல் அனுப்பப்பட்டுள்ளதுடன், அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2024 செப்டெம்பர் மாதத் தில் சட்ட கட்டணமாக விலைப் பட்டியல் செய்யப்பட்ட ரூபா 7.6 மில்லியனை அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கௌரவ சட்டமா அதிபர் 30.10.2024 அன்று SC/FR/198/2024 மற்றும் 254/2024 இல் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டதுடன் இந்த வழக்குகள் 2024 நவம்பர் 26 அன்று தள்ளுபடி செய்யப்பட்டன எவ்வாறாயினும், இந்த வழக்குகளில் சட்ட கட்டணமாக ரூபா 7.6 மில்லியன் செலவிடப்படவில்லை. எனவே, இந்த தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. | வெளிவாரி சட்டத்தரணி ஒருவரின் சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான அமைச்சரவை தீர்மானங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுதல் வேண்டும். |

### 1.9 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தின் பகுதி V இன் பிரிவு 17 இற்கு முரணாக, 2022 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு முதல் 2023 ஆகஸ்ட் வரை லங்கா எலெக்ட்ரிசிட்டி கம்பனி லிமிடெட்டிற்கு மின்சாரம் வழங்குவதற்காக அறவிடப்பட்ட ரூபா 1,224.1 மில்லியன் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி (எஸ்.எஸ்.சி.எல்) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 2024 மே இறுதிவரையிலும் செலுத்தப்படவில்லை. | இப்பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டு கொடுப்பனவு 2024 யூலை மாதம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பாதுகாப்பு பங்களிப்பு விதிப்பனவு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

இலங்கை மின்சார சபையின் மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகள் ரூபா 61,236 மில்லியன் வரிக்கு முந்திய இலாபத்தை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முந்திய (மீளமைக்கப்பட்ட) நட்டம் ரூபா 298,189 மில்லியன் ஆகும். ஆகையால் மீளாய்வாண்டிற்கான இலாபத்தில் ரூபா 359,425 மில்லியன் தொகையான பாரிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மின்சாரக் கட்டணங்கள் பெருமளவில் அதிகரித்தமையால் விற்பனை வருமானம் 97 சதவீதத்தால் அதிகரித்தமையே நிதிவிளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்துக்கு முக்கிய காரணமாகும்.

மேலும், மீளாய்வாண்டிற்கான குழமத்தின் செயல்பாட்டு விளைவுகள் வரிக்கு முந்தைய ரூபா 78,844 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு முந்தைய ஆண்டில் தொடர்புடைய நட்டம் (மீளமைக்கப்பட்ட) ரூபா 274,606 மில்லியனாக இருந்தது. எனவே, இலாபத்தில் ரூபா 353,450 மில்லியன் தொகையான பாரியளவு அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவினத்தின் போக்கின் மீதான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு குழுமத்தின் மீளாய்வாண்டிற்கான பிரதான வருமானம் மற்றும் செலவினத்தின் போக்கின் அதிகரிப்பு அல்லது குறைவுப் பகுப்பாய்வு அவற்றின் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | விலகல் தொகை அதிகரிப்பு/(குறைவு) | சதவீதம் | விலகலுக்கான காரணம் |
|---|---|---|---|
| | (ரூபா பில்லியன்) | % | |
| வருமானம் | 305.23 | 81 | 2022 ஆகஸ்ட் 10 முதல் 2023 அக்டோபர் 20 வரை விதிக்கப்பட்ட மின்சார கட்டண திருத்தங்கள் மூலம் எரிசக்தி விகிதங்கள் மற்றும் மாதாந்த நிலையான கட்டணங்களை அதிகரித்தல். |
| விற்பனைகள் கிரயம் | 62.83 | 13 | எரிபொருள், நிலக்கரி மற்றும் மின்சார கொள்முதல் செலவு அதிகரிப்பு. |

| | | | |
|---|---|---|---|
| | | | மின் விநியோகத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவு அதிகரிப்பு. |
| நிதிக் கிரயம் | 19.91 | 43 | கடன்களுக்கான வட்டி செலவில் அதிகரிப்பு, IPP மற்றும் NCRE கொடுப்பனவுகளுக்கான தாமதமான வட்டி அதிகரிப்பு. |

### 2.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

### 2.3.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குழுமத்தின் தொழிற்படு மூலதன நிலைமை ரூபா 9,288 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக இருந்த அதேநேரம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு இது (மீளமைக்கப்பட்ட) ரூபா 158,771 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 94 சதவீதத்தால் மேலும் முன்னேற்றம் கண்டிருந்தது.

### 2.3.2 உரிமை மூலதனத்திற்கான கடன்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குழுமத்தின் உரிமை மூலதன மீதியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 48 சதவீதத்தால் அல்லது ரூபா 196,663 மில்லியனால் அதிகரித்திருந்தது. மேலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குழுமத்தால் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தில் 39 சதவீதம் அல்லது ரூபா 389,384 மில்லியன் தொகை கடன்களினூடாக நிதியிடப்பட்டிருந்தது. அத்துடன், குழுமத்தின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் முன்னைய ஆண்டின் 93 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 64 சதவீதம் வரை குறைந்திருந்தது.

### 2.3.3 இலாபத்தன்மை

2022 ஆம் ஆண்டிற்கான (மீளமைக்கப்பட்ட) ரூபா 36.15 ஆன அலகு ஒன்றிற்கான சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 40.92 ஆக இருந்ததுடன் அலகொன்று ரூபா 42.86 சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டது (முன்னைய ஆண்டுச் சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 21.24 ஆக இருந்தது). அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த இலாபம் ரூபா 1.94 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 14.91 ஆன முன்னைய ஆண்டுச் சராசரி மொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது இது மொத்த இலாபத்தில் ஏற்பட்ட 113 சதவீத அதிகரிப்பாகும். பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வகை** | **அலகொன்றின் பங்களிப்பு (kWh)** | |
|---|---|---|
| | **2023** | **2022 (மீளமைக்கப்பட்ட)** |
| | **ரூபா** | **ரூபா** |
| குடியிருப்புகள் | 2.74 | (17.04) |
| மதத்தலங்கள் | 2.27 | (19.87) |
| பொது நோக்கம் | 9.78 | (8.59) |
| ஹோட்டல் | 1.36 | (14.73) |

| | | |
|---|---|---|
| கைத்தொழில் | (2.27) | (15.55) |
| அரசாங்கம் | 10.83 | (12.35) |
| எல்ஈசீஓ இற்கான மொத்த வழங்கல்கள் | (3.27) | (17.02) |
| வீதி விளக்குகள் | (40.89) | (36.14) |
| விவசாயம் | 21.08 | (11.15) |
| சராசரி பங்களிப்பு | 1.94 | (14.91) |

அதன்படி, கைத்தொழில், எல்ஈசீஓ இற்கான மொத்த வழங்கல்கள் மற்றும் வீதி விளக்குகள் தவிர்ந்த சபையின் அனைத்துவகைக் கட்டணங்களும் மீளாய்வாண்டில் நேர்க்கணியப் பங்களிப்பாக இருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்பிற்கு ஆகக்கூடிய பங்களிப்பை அரச துறை வழங்கியிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் மொத்தப் பங்களிப்பிற்கு ஆகக்கூடிய எதிர்க்கணியப் பங்களிப்பை வீதி விளக்குகள் வழங்கியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (i) மின்வலு உற்பத்தி மற்றும் நேர்க் கிரயம் (விநியோக மற்றும் பரிமாற்றல் நீங்கலாக)

நாட்டிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது இ.மி.ச. இன் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள சாதகமற்ற நிபந்தனைகள், அனல் மின்வலு உற்பத்திக்காக ஏற்பட்ட உயர் கிரயம் மற்றும் காற்று மற்றும் ஏனைய புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களிலிருந்தான குறைந்த பங்களிப்பு அத்துடன் சபையின் தொடர்ச்சியான நட்டத்தை ஈடுசெய்வதற்காக அண்மையில் கட்டண வீதங்கள் அதிகரிப்பட்டமை காரணமாக இ.மி.ச. ஆல் இந்த நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

மேலும் இ.மி.ச. இன் நீண்டகால உற்பத்தித் திட்டம் மற்றும் பரிமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக இ.மி.ச. அவசர மின்வலுக் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தமையால் இ.மி.ச. இன் ஆகக் குறைந்த கிரய நோக்கத்தை மோசமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு 2023 ஆம் ஆண்டிற்கான மின்வலு உற்பத்தி நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| **மூலம்** | **2023** | **2022** | **அதிகரிப்பு/(குறைவு)** | |
|---|---|---|---|---|
| | **GWh** | **GWh** | **GWh** | **%** |
| **இலங்கை மின்சார சபை** | | | | |
| நீர்மின் | 4,573 | 5,364 | (791) | (14.7) |
| அனல்மின் | 1,972 | 1,337 | 635 | 47.5 |
| நிலக்கரி | 4,646 | 5,174 | (528) | (10.2) |
| காற்று | 391 | 347 | 44 | 12.6 |
| சிறிய தீவுகள் | 2.7 | 2.6 | (0.1) | 3.8 |
| **உப மொத்தம்** | **11,585** | **12,225** | **(640)** | **(5.2)** |

| | | | | |
|---|---|---|---|---|
| **சுயாதீன மின்வலு உற்பத்தியாளர்** | | | | |
| நீர்மின் | 1,378 | 1,377 | 1 | 0.1 |
| அனல்மின் | 1,160 | 1,128 | 32 | 2.8 |
| காற்று | 427 | 376 | 51 | 13.6 |
| ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 167 | 117 | 50 | 42.7 |
| தளத்துடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி | 227 | 190 | 37 | 19.5 |
| கூரைக்கு மேலான சூரியசக்தி | 632 | 530 | 102 | 19.2 |
| **உப மொத்தம்** | **3,991** | **3,718** | 273 | 7.3 |
| **கூட்டு மொத்தம்** | **15,576** | **15,943** | **(367)** | **(2.3)** |

அதன்படி, மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், சபையின் நீர் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்தான நீர் மின் உற்பத்தி மற்றும் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து நிலக்கரி மின் உற்பத்தி தவிர்ந்த ஏனைய அனைத்து மூலங்களிலிருந்தும் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது. மேலும், அனல் (சபை) மற்றும் பிற மரபுசாரா புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து மின் உற்பத்தி முறையே 47.5 சதவீதம் மற்றும் 42.7 சதவீதம் அதிகரித்துள்ளதுடன் கிரிட் இணைக்கப்பட்ட சூரிய சக்தி மற்றும் கூரை சூரிய சக்தியிலிருந்து மின் உற்பத்தியும் முறையே 19.5 சதவீதம் மற்றும் 19.2 சதவீதம் அதிகரித்துள்ளது. இருப்பினும், ஜூன் முதல் அக்டோபர் வரையிலான மாதங்களில் நிலவிய வறட்சி நிலைமைகள் காரணமாக, சபையின் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து நீர் மின் உற்பத்தி முந்தைய ஆண்டை விட 791 Gwh அல்லது 14.7 சதவீதம் குறைந்துள்ளது.

**(ii) நேர்க் கிரயம்**

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டிற்கான நேர்க் கிரயங்களின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| **விடயம்** | **2023 ரூபா மில்லியன்** | **2022 ரூபா மில்லியன்** | **அதிகரிப்பு / (குறைவு) சதவீதம்( %)** |
|---|---|---|---|
| எரிபொருள் | 120,961 | 68,875 | 75.62 |
| நிலக்கரி | 158,208 | 135,126 | 17.08 |
| மின்வலுக் கொள்வனவு | 128,004 | 121,244 | 5.58 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 65,131 | 85,615 | (23.93) |
| பெறுமானத்தேய்வு | 34,662 | 33,765 | 2.66 |
| **நேர்க் கிரயம்** | **506,966** | **444,625** | **14.02** |

மேற்படி தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது எரிபொருள் மற்றும் நிலக்கரி கிரயங்கள் தொடர்ச்சியாக அதிகரித்தமையின் விளைவாக எரிபொருள் மற்றும் நிலக்கரிக் கொள்வனவுக் கிரயங்கள் முறையே 75.62 சதவீதத்தாலும் 17.08 சதவீததத்தாலும் அதிகரித்திருந்தன.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
